# பண்மகள்

පන්මගළ් PANMAGAL

இதழ் : 17 பெப்ரவரி : 2020






## மாணவர் பாராளுமன்றம்



யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் 25.10.2019 அன்று காலை 11.30 மணியளவில் இரண்டாவது மாணவர் பாராளுமன்ற அமர்வு மிக விமர்சையாக இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வலயக்கல்விப் பணிப்பாளரான திரு. சு.சுந்தரசிவம் அவர்களும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராளுமன்ற பிரதிநிதிகளுடன் அயல் பாடசாலை ஆசிரியர் மற்றும் மாணவர்களும் எமது பாடசாலை வெளி வீதியிலிருந்து பாடசாலைக்கு அழைத்துவரப்பட்டனர். எமது பாடசாலை மாணவர் பாராளுமன்ற நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டதுடன் கௌரவ 10 அமைச்சர்களும் கௌரவ சபாநாயகர் ஜிவிதா ஜெயரட்ணம் அவர்களின் அனுமதியுடன் தமது அமைச்சின் பிரேரணைகளை முன்வைத்தனர்.

கௌரவ அமைச்சர்களினால் முன் மொழியப்பட்ட பிரேரணைகளால் பாடசாலை மண்டபத்தை மீள் ஒழுங்கமைக்கும் செயற்றிட்டம், பாடசாலை நிதிநெருக்கடியைத் தீர்த்தல், மாணவர்களின் உள்வருகை வெளியேற்றுகை என்பதை கண்காணித்தல் மற்றும் அலங்காரத் தாவரங்களைக் கொண்டு புதிய பூந்தோட்டம் அமைக்கும் செயற்றிட்டம் என்பன மிகவும் பயனுள்ள விடயங்களாக அமையுமென கௌரவ பிரதமர் தமது தொகுப்புரையினை முன் வைத்தார். பின்னர் எமது பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.சுந்தரசிவம் அவர்கள் எமது பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமென்றும் எமது பாடசாலை பாராளுமன்றம் தொடர்பாக மாணவர்களிற்கு சிறந்த கருத்துக்களையும் வழங்கினர். பின் 1.30 மணியளவில் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

**மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள்**

1. சபாநாயகர் - ஜிவிதா ஜெயரட்ணம்
2. பிரதமர் - திலக்சனா மகேஸ்வரன்
3. சபைமுதல்வர் - பவிற்றலா செல்வரகு

**அமைச்சர்கள்**

சங்கனி. யோ, கஜனி. கு, சிறிகெஜலா. சி, புவேந்தினி. அ, அனோஜி. சி, சரண்யா. த, கில்டா. பி, அனுஜா. ஆ, நிதர்சகா. ஸ்ரீ, அனிஸ்ரெலா. ஜோ



## அதிபரின் ஆசிச்செய்தி

அதிபர்
திருமதி.செ.தேவராஜ்

தொல் புகழும் கலாசார பாரம்பரியங்களையும் கொண்டு 200வது ஆண்டை நோக்கி வீறுநடை போடும் எமது பாடசாலையின் ஆசிரியர், மாணவர்களினால் வெளியிடப்படும் பண்மகள் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன். தொழிநுட்ப சாதனங்களுள் மூழ்கி வாசிப்பு பழக்கம் அருகி வருகின்ற இக்காலத்தில் மாணவ சமூகத்தின் சிந்தனைத் திறனைத் தட்டி எழுப்பி எழுத்தாற்றலையும் ஆளுமைத் திறன்களையும் வளர்த்தெடுப்பதில் "பண்மகள்" பெரும் பங்காற்றி வருவது யாவரும் அறிந்ததே. மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு களமாகவும் எண்ணங்களுக்கு உருக்கொடுக்கும் ஊடகமாகவும் இந்த இதழ் விளங்குகின்றது. பல்வேறு சூழ்நிலைக் காரணங்களால் ஒரு சில ஆண்டுகள் பண்மகளின் வருகை தடைப்பட்டாலும் மீண்டும் தொடங்கும் மிடுக்குடனும் புதுப் பொலிவுடனும் இவ்வாண்டு வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

பண்மகளின் வருகைக்கு அயராது உழைத்த மலர்க்குழுவினரையும் மலர் ஆசிரியரையும் ஆக்கங்களை வழங்கியோரையும் பாராட்டுவதோடு தடைகளைத் தகர்த்து முன்னேறி தொடர்ந்து இந்த இதழானது வெளிவர எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.



திலக்சனா மகேஸ்வரன்
12 A/L (2020)

# விளையாட்டு நிகழ்வுகளில்....

## ஹொக்கி Runners up





அகிலஇலங்கை ரீதியாக நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கி போட்டியில் யாழ் மாவட்ட அணியில் சாதித்த எம் வீராங்கனைகள் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கி போட்டியில் யாழ்மாவட்ட அணியில் எமது பாடசாலை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரான செல்வி. பி. பிந்துஷா அவர்களும் பதின்மூன்று மாணவிகளும் பங்குபற்றி மாவட்ட ரீதியான வெற்றிக்கு வித்திட்டனர். யாழ்மாவட்ட அணியானது 1 runners up ஆக தெரிவு செய்யப்பட்டது. Best Keepar க்கான விருது எமது பாடாலை மாணவி வி.ஜெஸ்மினாக்கு கிடைத்தது. பாடசாலையில் இருந்து பங்குபற்றிய மாணவிகள் விபரம் பெ.பிறின்சின், வ.டர்சிகா, நி.ரித்திகா, க.பிருந்தாயினி, அ.சுஜாத்தா, இ.றம்மியா, பி.பிரதீபா, ப.வைஷ்ணவி, க.இந்துஜா, வி.ஜெஸ்மினா, வி.தர்சிகா, பா.டிலக்ஷனா, இ.லஞ்சிகா.

20 வயதுப் பெண்களுக்கான 100m. 200m ஓட்ட நிகழ்வில் பெ.பிறின்சின் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

## புலமைப்பரிசில் பரீட்சை - 2019

2019 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 40 மாணவர்களில் 36 பேர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர்.



ரா.சன்ஜித்
170



சி.ஜசிந்தன்
166



வி.றொஜேஸ்
157



ஜெனோசியா
155

## பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவானது 01.03.2019 வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைப்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட செயலக அரசாங்க அதிபர் உயர்திரு நா.வேதநாயகன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு ப.கணேசன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## துடுப்பாட்டம்



20 வயது பிரிவினருக்கான வலயமட்ட துடுப்பாட்டப் போட்டியில் எமது பாடசாலையின் வீராங்கனைகள் 2ம் இடத்தைப்பெற்று மாகாணமட்டப் போட்டியிலும் தமது திறமையை வெளிப்படுத்தினர்.

## உயர்தர மாணவர் மன்ற ஒன்று கூடல்

பாடசாலையின் உயர்தர மாணவ மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு 06.07.2019 நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் பல்கலைக் கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி K.T.கணேசலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.






# பண்டத்தரிப்பின் சிறப்பு

பண்டத்தரிப்பு என்பது இலங்கையில் வடமாகாணத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து 16km வடக்கே அமைந்துள்ள ஒரு சிறு நகரமாகும். பண்டத்தரிப்பு நகர சபையானது அதனையண்டிய சிற்றூர்களை உள்ளடக்கியது. அவையாவன சில்லாலை, வடலியடைப்பு, காடாப்புலம், பணிப்புலம், காலையடி மற்றும் பிரானபற்று என்பனவாகும்.

பண்டத்தரிப்பு என்ற பெயர் அமைந்தமைக்கான காரணம் சரியாக யாருக்கும் தெரியாவிட்டாலும் வெவ்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு சிலர் இது ஒரு காலத்தில் பண்டங்களை தரித்து வைக்கும் தளமாக இருந்திருக்கலாம் என்பர். வேறு சிலர் இது பாண்டியர் படையெடுப்பின் போது அதன் படைகள் தரித்துச் செல்லும் இடமாக சில காலம் இருந்ததால் முன்னர் "பாண்டியன் தரிப்பு" என்று அழைக்கப்பட்டு பின்னர் பண்டத்தரிப்பாக மருவியதாகவும் கூறுவர். 1993ஆம் ஆண்டளவில் யுத்தச் சூழல் காரணமாக பண்டத்தரிப்பில் வசித்து வந்த அனைவரும் முற்றிலுமாக இடம்பெற வேண்டி ஏற்பட்டது. இந்தக்கால கட்டத்தில் பண்டத்தரிப்பு முழுமையாக பாழடைந்த நகரம் எனும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தாலும் மக்கள் சிறிது சிறிதாக மீண்டும் குடியேறியமையால் ஓரளவு பழைய நிலைக்கு வந்துள்ளது.

பண்டத்தரிப்பு என்ற இடத்தை சுற்றிவரப் பயிர்ச் செய்கைக்குரிய காணிகள் காணப்படுகின்றன. இதனைவிட பண்டத்தரிப்பில் இரண்டு பாடசாலைகளும் அமையப் பெற்றுள்ளன. அவையாவன யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மற்றும் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பன அவையாகும். இங்குதான் முதன் முதலில் அமெரிக்க மிஷனின் வருகை இடம்பெற்றது.

பண்டத்தரிப்பில் ஒரு பொதுச்சந்தையும் காணப்படுகின்றது. இச்சந்தையே ஆரம்பகாலத்தில் அனைவருக்கும் பிரதானமான சந்தையாக இருந்தது. ஆனால் இன்றோ நலிவடைந்த நிலையில் உள்ளது. இங்குபல ஊர் மக்கள் தமக்குத் தேவையான மரக்கறி வகைகள், பழங்கள் என்பவற்றை பெற்றுச் செல்ல மிக உகந்த இடமாக காணப்படுகின்றது. பண்டத்தரிப்பில் முதன் முதலில் அலோபதி மருத்துவ வசதி கொண்டு வரப்பட்டது பெருமைக்குரிய விடயமாகும்.

ஜம்புகோளப்பட்டினம், திருவடிநிலை போன்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்கு சென்றடைவதற்கும் பண்டத்தரிப்பு பிரதான வழியாகக் காணப்படுகின்றது. இதனால் பண்டத்தரிப்பு சந்தி முதன்மை பெற்றிருக்கின்றது.


பண்டத்தரிப்பில் பல சமயத் தலங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் கிறிஸ்தவ தேவாலயங்களும், இந்துக் கோயில்களும், முதன்மை பெற்றுள்ளன. அதில் பற்றிமா அன்னை ஆலயம். சில்லாலை கதிர மாதா தேவாலயம் பண்டத்தரிப்பு சித்தி விநாயகர் ஆலயம். ஐயனார் ஆலயம் குறிப்பிடத்தக்கன. சில்லாலை கதிரமாதா ஆலயமானது ஆரம்பகாலத்தில் மருந்து மாதா எனவும் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும் புனித யோசவாஸ் அடிகளார் சில்லாலைக்கு கிறிஸ்தவ மதத்தை நிலைப்படுத்த வருகை தந்ததாகவும் கூறப்படுகின்றது.

இவ்வகையில் பண்டத்தரிப்பு என்ற பிரசித்தி பெற்ற இடம் வயல்வளம் பொருந்தியதாகவும் அனைவரும் தரித்துச்செல்லும் இடமாகவும் காணப்படுவதால் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது.

ஞா.கிருசாளினி
A/L 2021 கலைப்பிரிவு

---

# அழகு



பகலைப் பார்
பகலவன் அழகு
நிசியைப் பார்
நிலவு அழகு
கடலைப்பார்
நீர் அழகு
திடலைப்பார்
புல்வெளி அழகு
தாயைப்பார்
அன்பு அழகு
தந்தையைப்பார்
செயல் அழகு
உன்னைப் பார்
உடல் அழகு
உனக்குள் பார்
இறையழகு

ச.ஜஸ்மினா
2021 விஞ்ஞானப்பிரிவு

வளர்ந்து வரும் நாடுகளுக்கு வழிகாட்டியாக விளங்கும்

# பின்லாந்து




## பின்லாந்தின் அமைவு

ஐரோப்பிய கண்டத்தின் ஸ்கண்டினேவிய தீபகற்பகத்தில் Scandinavia அமைந்துள்ள நாடான பின்லாந்து நோர்வே, சுவீடன், ரஷியா என்பவற்றை அயல்நாடுகளாக கொண்டு விளங்குகின்றது. இந் நாட்டின் தலைநகராக ஹெல்சிங்கி (Helsinki) விளங்குகின்றது. இதர நகரங்களாக எஸ்போ, வான்ரா, ரூர்கு போன்றன காணப் படுகின்றன. பின்லாந்தின் சனத்தொகை 5.52 மில்லியனாகும். நாட்டின் மத்திய மற்றும் தென்பகுதிகளிலேயே மக்கள் செறிவாக வாழ்கின்றனர். தலைநகரில் மட்டும் 1.4 மில்லியன் பேர் வாழ்கின் றமை குறிப்பிடத்தக்கதாகும். ஐரோப்பிய வலயத்தின் எட்டாவது பெரிய நாடாக இது அமைந்துள்ளது. இந்நாட்டின் பிரதான மொழிகளாக பின்னிஷ் (Finnish), சுவிடிஷ் (Swedish) என்பன காணப்படுகின்றன. 59% மக்கள் பின்னிஸ் மொழி பேசுபவர்களாக காணப் படுகின்றனர்.

இன்றைய உலகில் நாடுகளின் பொருளாதாரம் உலகமய மாக்கல் (Globalization) செயன்முறையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடான பின்லாந்து சேவை சார்ந்த பொருளா தாரத்தில் அதிகம் தங்கியுள்ளது. ஐரோப்பாவில் அறிவுசார் பொருளாதாரத்தில் (Knowledge economy) நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணில் (Human development Index) உலகில் 5வது இடத்தைப் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக மகிழ்ச்சி தொடர்பான அறிக்கையில் 2019 இல் பின்லாந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது. Nokia, UPM, Neste, Kesko, Sampo Group போன்றன இந்நாட்டின் முதன்மையான வர்த்தக கம்பனிகள் ஆகும்.

பின்லாந்தின் இத்தகைய பொருளாதார, சமூக, தொழில் நுட்ப மேம்பாட்டுக்கு எல்லாம் அதனுடைய கல்வி பல்பரிமாணம் ஆதாரமாக அமைவது என பொருளாதார வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய பின்னணியில் வளர்ந்து வரும் நாடுகள் முன்மாதிரிகளைப் பெற்று வளர்ச்சி பெறவேண்டிய தேவை காணப்படுகின்றது.

## கல்வி வரலாறு

ஆரம்பத்தில் பின்லாந்தில் கத்தோலிக்க தேவாலயங்களே கல்வியை வழங்கிவந்தன. 13ஆம் நூற் றாண்டில் Turku எனும் நகரில் கத்தோலிக்க பாடசாலை நிறுவப்பட்டது. இலத்தீன் மொழியில் கல்விப் போதனைகள் இடம்பெற்று வந்தன. 16ம் நூற்றாண்டில் நிகழ்ந்த மாட்டின்லூதர் தலைமையிலான மதசீர்திருத்தம் கல்விச் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியது. முதலாவது பின்னிஷ் மொழியிலான பல்கலைக்கழகம் 1640இல் Turku எனும் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் Royal Academy of Turku, The Royal Academy Of Abo எனும் பெயர்களால் அழைக்கப்பட்டது. பின்லாந்தின் முதலாவது பல்கலைக்கழகம் எனும் சிறப்பினை பெற்றுக் கொள்கின்றது. 1928க்கு பின்னர் இப்பல்கலைக்கழகம் ஹெல்சிங்குக்கு (Helsiki) மாற்றப்பட்டது. 1917இல் பின்லாந்து இறைமையுள்ள அரசாக மாற்றம் பெற்றபோது ஹெல்சிங்கி பல்கலைக் கழகம் University of Helsinki எனப் பெயர் மாற்றம் பெற்றது. இப் பல்கலைக்கழகம் 11 பீடங்களையும் 11 ஆராய்ச்சி மையங்களையும் கொண்டுள்ளதுடன் 35000 மாணவர்கள் கற்கும் பழமையான கல்வி நிலையமாக விளங்குகின்றது. 19ம் நூற்றாண்டில் தொழில்சார் கல்வியின் தோற்றம் பின்லாந்தில் ஆரம்பமாகியது. விரைவாக வளர்ச்சியடைந்து வந்த கைத்தொழில் தேவைகளை கருத்தில் கொண்டு இவ்வளர்ச்சி காணப்பட்டது. 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்ப பாடசாலைகள் அதில் நிறுவப்பட்டன. கட்டாயக் கல்விச்சட்டம் 1921 இல் இயற்றப்பட்டது. 1925 தேசிய ரீதியிலான முதலாவது கலைத்திட்டம் வரையப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் அதிகளவு நிறுவப்பட்டன. 1970களிற்கு பின்னர் பின் லாந்தின் கல்வி முறைமையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகள் Comprehensive பாடசாலைகள் முறைமை மூலம் பதிலீடு செய்யப்பட்டதுடன் 09 ஆண்டுகளைக்கொண்ட கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கல்விச் சீர்திருத்தத்தின் முதன்மையான நோக்கமாக அடிப்படைக் கல்வியை இலவசமாகவும் சமமாகவும் வழங் குவதை உறுதிப்படுத்துவதாகும்.

## ஆசிரியர்களை இணைத்தல்

ஒரு நாட்டில் கல்விமுறையமைப்பில் ஆசிரியர்கள் அதிகம் தாக்கம் செலுத்துவதனை கல்விசார் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஆசிரியர்களின் பாடத் துறைசார்ந்த புலமையும் தொழில்சார் வாண்மையும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் மாத்திரமல்லாது நடத்தைகளிலும் செல்வாக்கு செலுத்துகின்றதைக் காணலாம். பின்லாந்து நாட்டில் ஆசிரியர்களுக்கு மருத்துவர்கள், சட்டத்தரணிகள் போன்றோருக்கு வழங்கப்படும். அந்தஸ்து கொடுக்கப்படுவதைக் காணலாம். இதற்கு ஆசிரியர்கள் கொண்டிருக்கும் தொழில்சார் வாண்மைத்துவம் காரணமாகும்.

பின்லாந்தில் அசிரியர்கள் சேவைக்கு இணைத்து கொள்வது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது கடினமான முறை பின்பற்றப்படுகின்றது. பின்லாந்தின் பட்டதாரிகளில் 10% சதவீதமானவர்களில் இருந்து ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அனைத்து ஆசிரியர்களும் முதுமாணி பட்டத்தை பெற்றிருக்க வேண்டும். இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்கும் ஓர் துறையாக ஆசிரியர்கள் சேவைக்கு இணைத்து கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1970 களில் ஆசிரியர் கல்வி ஆசிரியர்களில் (Seminarium) இருந்து பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டமை. குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை 08 பல்கலைக்கழகங்கள் முன்னெடுத்து வருகின்றமை.

63500 வரையிலான ஆசிரியர்கள் அண்ணளவாக அடிப்படைக்கல்வி வழங்கும் பாடசாலைகள் காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவார். கற்பித்தல் முறைகள், கற்றல் உபகரணங்கள் என்பனவற்றை தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு தெரிவு செய்து பயன்படுத்த ஆசிரியர்களுக்கு அதிகாரம் காணப்படுகின்றது. ஆசிரியர்கள் பாடசாலை நாட்களில் சில மணித்தியாலங்களினையே வகுப்பறைகளில் செலவு செய்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஆசிரியர்களைக் காட்டிலும் குறைவாகும். மேலதிக நேரத்தினை மாணவர்களை மதிப்பிடவும் கலைத்திட்டத்தினை விருத்தி செய்யவும் செலவிடுகின்றனர். ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டதும் சில பொறுப்புக்கள் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற போதும் வகுப்பறை மேற்பார்வையாளர்கள் (Inspectors) காணப்படுவதில்லை. அதிபர் வழிகாட்டும் தலைவர்களாக காணப்படுகின்றன.

ஆசிரியர்கள் முன் பயிற்சிக்கு அதிகளவு முதலீடு செய்யப்படுகின்றது. கல்வியியல் முதுமாணி பட்டம் ஆசிரியர்களுக்கு வேண்டப்படும் கல்வித் தகைமையாகும். பல்கலைக்கழகங்களில் 05 ஆண்டுகள் கற்று இப்பட்டத்தை பெற்றுக் கொள்வதன் மூலம் தகுதி வாய்ந்த ஆசிரியராக விளங்குகின்றனர். ஆரம்ப பாடங்களை மேற்பார்வை செய்கின்றனர். பின்லாந்து பல்கலைக்கழகங்களில் ஆரம்ப ஆசிரியர் கல்வி நிகழ்ச்சி திட்டங்களில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் 1/5 பகுதியினரே அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதிகளின்போது உயர் கல்வித் தகைமைகள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படாது ஆசிரியராகுவதில் அவர்கள் கொண்டுள்ள பேரார்வமும் கருத்தில் கொள்ளப்படுகின்றது.



## அடிப்படைக் கல்வி

எந்தவொரு நாட்டினதும் பொதுக் கல்வியில் அடிப்படைக்கல்வி ஆதாரமாக உள்ளது. பின்லாந்தின் கல்வி அமைப்பில் ஒன்பது ஆண்டுகள் பாடசாலையில் மாணவர்களுக்கு (7-16 வயதுக் குழுக்கள்) கல்வி அடிப்படையாக வழங்கப்படுகின்றது. 1998ம் ஆண்டு அடிப்படைக் கல்விச்சட்டத்தின் கீழ் (Basic Education Act of 1998) இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வயதுக் குழுவினருக்கு இலவசமாக அடிப்படைக்கல்வி வழங்கப்படுகின்றது. ஏழு வயதினை அடைகின்ற போது மாணவர் ஒருவர் கல்வியினை பாடசாலையில் பெற ஆரம்பிக்கின்றார். மருத்துவ காரணங்களினால் கல்வி பெற முடியாதவர்கள் தவிர ஏனையோர் கல்வி பெறுவது முதன்மையானதாகும். அடிப்படைக்கல்விக்கான பாடசாலைகள் பின்லாந்தின் எல்லா பிரதேசங்களிலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

அடிப்படைக்கல்வியில் மாணவர்கள் பாடசாலையில் தாய்மொழி (பின்னிஷ், சுவீடிஸ்) சூழலியல் கல்வி, குடியுரிமைக்கல்வி, சமயம், வரலாறு, சமூகக் கல்வி, கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், புவியியல், உடற்கல்வி, சங்கீதம் உள்ளிட்ட பாடங்களை கற்குமாறு பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டாயக் கல்வியானது Comprehensive school மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது. Comprehensive school பாடசாலைகள் இரண்டு வகைகளை கொண்டுள்ளன. ஆரம்பக்கல்வி பாடசாலைகள் தரம் 01 தொடக்கம் 06 வரை கொண்டுள்ளது. இரண்டாம் நிலைப்பாடசாலைகள் 07 தொடக்கம் 09 வரை உடையனவாக காணப்படுகின்றன. இவ் பாடசாலைகளில் வழங்கப்

படும் கல்வி இலவசமாக வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

பின்லாந்தின் பாடசாலைப்பருவம் வருடத்தின் ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்து மே அல்லது யூனின் முற் பகுதியில் நிறைவு பெறுகிறது. யூன். யூலை மாதங் களில் கோடை விடுமுறைக்காலம் காணப்படுகின்றது. மாணவர்களின் பெற்றோர்களுடன் பாடசாலைகள் தொடர்புகளை பேண இணையவழி தொடர்பாடல் சேவை பேணப்பட்டு வருகின்றது. மாணவர்களின் கற்றல், பரீட்சைகள், பாடசாலை நிகழ்வுகள், விடுமுறை கள் போன்ற பல்வேறு தகவல்களை பெற்றோர் பெற்றுக் கொள்ள முடிகின்றது. மாணவர்களுக்கான உளவளத் துணையாளர்கள் உதவி புரிபவர்களாக காணப்படு கின்றனர். ஆசிரியர்கள் குறுகிய கால பரிகார கல்வியை வழங்குபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்படுவ தற்கு முன் மாணவர்களுக்கு முன் பள்ளிக்கல்வியானது Day care centers மூலம் வழங்கப்படுகின்றது. இம் மையங்கள் அரச, தனியார்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஒரு வாரத்திற்கு 20 மணித்தியாலங்கள் இம் முன்பள்ளிகளில் மாணவர்கள் பங்கேற்கின்றனர். திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 04 மணித்தியாலங்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். விளை யாட்டுக்கள் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. கற்றல் விருத்திக்கான சர்ந்தர்ப் பங்களை மாணவர்களிடம் விருத்தி செய்வது முன் பள்ளிக் கல்வியின் இலக்கு எனலாம். 2015இல் இருந்து முன்பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பங்கேற்பது கட்டாயமானதாக மாற்றப்பட்டுள்ளது.

## பாடசாலை நாட்களும் மாணவர்களும்

09ஆண்டுகளைக் கொண்ட அடிப்படைக் கல்வியை வழங்கும் பாடசாலைகள் 2015 அளவில் 2500 வரை காணப்பட்டன. இவை உள்ளூர் அதிகார சபைகளாலும் ஏனைய கல்வி வழங்குனராலும் நிர்வகிக்கின்றன. இக்கல்வி இலவசமானதாக உள்ளதுடன் மாணவர்களுக்கான உணவும் இலவச மாக வழங்கப்படுகின்றன. வருடத்தில் 190 நாட்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. கிறிஸ்மஸ், ஈஸ்டர் விழாக்காலங்களில் குறுகிய விடுமுறைக் காலங் களைக் கொண்டுள்ளன. பாடசாலைகள் காலை 8,9 மணியளவில் ஆரம்பித்து பி.ப 1,2 மணி அளவில் நிறைவு பெறுகின்றன. ஒரு வாரத்தில் 25 பாடவேளை களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ் வொரு பாடமும் 45 நிமிடங்களைக் கொண்டதாகும். சராசரியாக 3மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் ஒரு நாளைக்கு சராசரியாக கற்றல் இடம் பெறுகின்றது. சில உயர்கல்வி பாடசாலைகளில் 15 நிமிட இடைவேளை யுடன் 75 நிமிடங்களைக் கொண்டதாக பாடவேளை காணப்படுகின்றது. OECD நாடுகளுடன் ஒப்பிடும் போது பின்லாந்து மாணவர்கள் கல்விக்காக செலவிடும் காலம் குறைவானது. 9-11 வரையான வயது பின்லாந்து மாணவர்கள் ஒரு வருடத்தில் 640 மணித்தியாலங்கள் செலவிடுகின்றன. இக்காலப் பகுதி பிரித்தானியாவில் 821 மணித்தியாங்களும் ஜப்பானில் 800 மணித்தியா லங்களுமாக காணப்படுகின்றது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமையம் உலகளாவிய ரீதியில் 15வயது சிறுவர் அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட 2014ம் ஆண்டு ஆய்வில் பின்லாந்து மாணவன் ஒருவன் வாரத்தில் 2.8 மணித்தியாலங்கள் வீட்டு வேலைகளை செய்வதற்கு செலவளிக்கின்றான். ஐக்கிய அமெரிக்காவில் 6.1 மணித்தியாலங்களாக காணப்படுகின்றன. பின்லாந்து மாணவர்கள் விளையாட்டுக்களில் கணிசமான அளவு நேரத்தை செலவிடுதல் முதன்மையான விடயம் எனலாம். மன ரீதியான அழுத்தங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமை கற்றலில் அதிக கவனம் செலுத்தி மிக உயர்ந்த பெறுபேறுகளை பெற இது காரணமாக அமைகின்றது.

இவ்வாறு பின்லாந்து கல்வி முறைக் கட்டமைப் பில் பின்பற்றிய புரட்சிகரமான சீர்திருத்தங்கள் அந்நாட்டினை தனித்துவமான நாடாக மிளிர வைத்துள் ளதுடன் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழச் செய்துள்ளது எனலாம். பின்லாந்தின் மாணவர் கள் கல்விப் பெறுபேறுகளில் காட்டிவரும் சாதனைகள் சர்வதேச ரீதியில் சாதனைகளாக கருதப்படுகின்றன. ஜோன்டுயி எனும் அமெரிக்க நாட்டு கல்விச் சிந்தனை யாளரின் கல்விச் சிந்தனைகள் பின்லாந்து நாட்டின் கல்வி முறைமையின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பது கல்வியாளர்களின் கருத்தா கும். இரண்டாம் உலகப்போரின் போது இந்நாடு சந்தித்த பொருளாதார மற்றும் உயிரிழப்புக்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துவனவாக காணப்பட்டன. இதற்கு பின்னர் இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் இன்று அதன் வெற்றிக்கு அடித்தளமாகி அனைவரா லும் வியந்து போற்றப்படும் நாடாக திகழ வைத்துள்ளது.

இ.கஜேந்திரன்
ஆசிரியர்

**க.பொ.த.சாதாரண தரம் - 2018**

| | | |
|---|---|---|
| திலக்ஷனா | - | 6A, B, 2C |
| கஜனி | - | 5A, B, 3C |
| கஜானா | - | 3A, 3B, 3C |
| உஷாந்தினி | - | 2A, 2B, 3C, 2S |
| பூர்வஜா | - | 2A, 5C, 2S |

பெறுபேற்றினைப் பெற்ற மாணவிகளை வாழ்த்துகிறோம்.

# பண்மகள் இதழ்

School T.P :- 0212051920
Email :- jpandateruppugirlshighschool@gmail.com

**ஆலோசனை**

திருமதி.செ.தேவராஜ்
(அதிபர்)

**மலர் ஆசிரியர்**

ந.குகபரன்

**மலர்க்குழு**

திருமதி.உ.பிரணவநாதன்
திரு.ந.விக்னேஸ்வரமூர்த்தி
திரு.A.R.விஜயகுமார்
திரு.கோ.சிற்சபேசன்
திருமதி.ம.குமாரவேல்
திருமதி.சா.ஜீவதரன்
திருமதி.ப.கோணேஸ்
திரு.ஜெ.ஜெயகிறிஸ்ரோ
திரு.இ.சந்திரசேனா
திருமதி.ஆ.வதனா
திருமதி.தி.முகுந்தன்
திருமதி.சு.சுபேசன்
திருமதி.டா.ராதா

## வாசிப்பின் வழியே....

ஆரோக்கியமான சமூக உருவாக்கத்துக்கும் நிலை பேறுக்கும் கல்வியின் பங்கு முக்கியமானது. வெறுமனே பரீட்சைகளை நோக்கிய கல்வியாக அமையாது சிந்தனையை செழுமைப்படுத்தித் திறன்களை கண்டடைந்து அவற்றை விருத்தி செய்வதனை மையப்படுத்தியதாகக் கல்விசார்ந்த செயற்பாடுகள் வடிவமைக்கப்பட வேண்டும்.

மனிதப்பெறுமானங்கள் கேள்விக்குள்ளாகும் இன்றைய சூழலில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் சுயத்தை மதிக்கவும் இணைந்து வாழவும் கருத்துக்களை பகிரவுமான ஒரு ஜனநாயக வெளியானது அவசியம். இந்த வெளியாளது அரசியல் மையப்பட்டது மட்டுமன்று. அது உண்மையில் ஒவ்வொருவரது மனதில் இருந்தும் வெளிப்பட வேண்டும். எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடனும் தரிசனத்துடனும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு வாசிப்பு மிகவும் அவசியம். "வாசிக்க மறுப்பவன் கற்க மறுப்பவனாவான்" என்பர்.

வாசிப்பின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும்." நூலளவாகுமாம் நுண்ணறிவு". நூல்கள் விரிவான, ஆழமான அனுபவத்தைத் தருகின்றன. எந்தப் பொழுதிலும் எம்முடன் உரையாடுவதற்குத் தயாராக உள்ளன.

சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கம் தொடங்க வேண்டும். வீட்டில் இருந்து வாசிப்பிற்கான சூழல் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்குப் பெற்றோர்களின் பங்கு அவசியம். நூல்கள் தொடர்பான உரையாடல்களில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் பாடசாலைகளில் ஏற்படுத்தப் படவேண்டும். கல்வியே மூலதனம் என்று வாழும் சமூகம் எந்தச் சூழ்நிலையிலும் தன்னிலை இழக்காது உயர்வடையும் என்பதே வரலாறு சொல்லும் பாடம். (ஆ-ர்)




## பழையன கழிதல்

மனிதன் உலகில் அதிகரித்து வரும் சனத்தொகையினால் பல்வேறு விதமான சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளான். அவ்வாறான சவால்களில் ஒன்று கழிவு வெளியகற்றப்படும் அளவின் அதிகரிப்பு ஆகும். கழிவுகள் நுண்ணங்கிகளால் பிரிகையாக்கத்திற்குட்பட்ட போதிலும் அதனிலும் வேகமாக கழிவுகள் சேர்கின்றன. கிராமங்களைவிட நகரங்கள் கழிவுகளால் நரகம் ஆகிவருகிறது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் கழிவு முகாமைத்துவம் சிறந்த முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை போன்ற நாடுகள் இன்றும் தவழும் குழந்தைப் பருவத்திலே காணப்படுகிறது. கனடாவில் டொரோண்டோ நகரில் பச்சை மூடித்தொட்டி திட்டம் (Green Bin Program) மூலம் உக்கும் கழிவுகள் கூட்டுரமாக மாற்றப்படுகின்றன.

கழிவு முகாமைத்துவத்தில் 4R அறிவை பின்பற்றுவதன் மூலம் சிறந்த மேம்பாட்டை அடைய முடியும். அதாவது மீள் பாவனை (reuse) பாவைனையைக் குறைத்தல் (Reduce) மாற்றீடுசெய்தல் (Replace) மீள்சுழற்சி (Recycle) போன்றன 4R திட்டம் ஆகும். எல்லாவற்றிலும் மேலாக கழிவுகளை தரம்பிரித்து அகற்றல் பிரதானமானது. தரம்பிரித்தல் என்பது எமது வீடுகளில் ஆரம்பிக்கும்போது அது நாடு வரை விரிவடைந்து வரும் என்பது கண்கூடு.

பாடசலைகளில் கழிவுகளில் அதீத வளர்ச்சியைத் தடை செய்வது. உரிய கழிவுத்தொட்டி வகுப்பறை ரீதியாக பயன்படுத்துவது நிறைந்த நன்மையை ஏற்படுத்தும் என்பது மகிழ்ச்சியான உண்மையாகும். மாணவர்கள் மூலம் அனுபவங்கள் சமூகத்திற்கு பகிரப்படும்போது எமது நாடு சிறந்த கழிவு முகாமைத்துவத்தில் மேம்பாடு பெறும் என்பது திண்ணம்.

திருமதி வி.தனேஷ்குமார்
ஆசிரியர்.





# செந்தமிழ் நன்மை

செந்தமிழ் இலக்கியங்கள் வாழ்வியல் முறைகளைத் தந்துள்ளன. தற்காலத்தின் நன்மையான வாழ்வு முறைகளையும் தீமையான வாழ்வு முறைகளையும் ஆராய்ந்து அதனால் கிடைக்கும் நற்பயன்களையும் தீய பயன்களையும் அதனை அனுபவிக்கும் முறைகளையும் பாட்டுக்களையும் பழந்தமிழ் இலக்கிய மாகவும் காலத்திற்கு காலம் காலத்தால் அழியாத அரும் நூல்களையும் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் வழங்கிச் சென்றுள்ளனர். மனித வாழ்வை பன்னிரண்டு நன்மைகள் செயற்படுத்துவதை மணிமேகலை எனும் ஐம்பெரும் காப்பிய நூல் கூறுகின்றது. சிலப்பதிகாரம், மணி மேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தா மணி என்பன ஐம்பெரும் காப்பியங்களாகும். பழந் தமிழர் அணிகலன்களைக் கொண்டு இவ் ஐந்து காப்பியங்கள் பெயர்களையும் உருவாக்கியுள்ளனர். சீத்தலைச் சாத்தனார் எனும் புலவர் மணிமேகலை எனும் காப்பியத்தை உருவாக்கி உள்ளார். வாழ்க்கைக்குத் தேவையான அரிய வழிமுறைகள் இந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிறவி எடுத்தார் அனைவரும் மூப்படைந்து நோயுற்று இறந்து போதல் இயற்கையானது. மாந்தர் பன்னிரண்டு நன்மைகளையும் அறிவார்களாயின் உலகின் இன்ப நிலையை அடைந்து நிலைபேறு உடைய வாழ்வை வாழ்வார். அறியாது விடின் துன்பத்தால் ஆழ்ந்து நரகத்து மூல்வர். "பிறந்தார் மூத்தார் பிணி நோய் உற்றார் இறந்தார்" என்கை இயல்பே இதுகேள் பேதமை செய்கை உணர்வே அரு உரு" என்ற பாடல் தொடரில்

வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்று என வகுத்த இயல்பு ஈர்
ஆறம் பிறந்தோர் அறியின் பெரும் பேறு அறிகுவர்
அறியர் ஆயின் ஆழ் நரகு அறிகுவர்.

கருத்து : பேதமை, செய்கை, உணர்வு, அருஉறு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பாவம், தோற்றம், வினைப்பயன் என்ற பன்னிரண்டு இயல்புகளையும் உலகோர் அறிவர் ஆயின் நன்நிலை அடைவர் இல்லையாயின் துன்பத்தில் உழல்வர்.

பேதமை என்பது யாது எனின் மேற்குறிப்பிட்ட இயல்புகளை உணராது மயக்கம் கருதி அதை விடாப்பிடியாக போற்றும் இயல்பினர் அறியாமையாகும். உலகு மேல், கீழ், நடு என மூன்றாகும். உயிர்கள் ஆறு வகையாகும். மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் உயிர்களாகிய அவை நல்வினை தீவினைப்பயனால் மேற்கூறப்பட்ட பிறவியெடுத்து தாம் செய்த வினைக்கு ஏற்ப இன்பமும் துன்பமும் அடைகின்றன.

"அலகில பல் உயிர் ஆறு வகைத்தாகும்.
மக்களும் தேவரும், பிரமரும், நரகரும்
தொத்த விலங்கும் பேயும் என்றே
நல்வினைத் தீவினை என்று இரு வகையான்
சொல்லப்பட்ட கருவினிற் தோன்றி"

தீவினை என்பது யாது என்றால் கொலை, களவு, காமம் ஆகிய மூன்றும் உடலால் செய்யும் துன்பம் எனவும் பொய், புறம் கூறல், கடும் சொல் பயனற்ற சொல் ஆகிய நான்கும் சொல்லிலே தோன்றுவதை என்றும் வெஃகுதல், வெருளல், மயக்கம் ஆகிய மூன்றும் உள்ளத்தில் தோன்றுவன எனவும் உடலால் செய்யும் குற்றம் என பத்து தீவினை கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன பத்து குற்றங்களை, தீவினைகளை உணர்ந்தோர் தீயவற்றில் சிந்தை செலுத்தார் செலுத்துவார் ஆயின் விலங்கு, பேய், நரகர் என்னும் பிறப் புக்களை எடுத்து கலக்கமுற்று பிறவி தோறும் துன்புறுவர்.

"உலையா உடம்பில் தோற்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடும் சொல் பயன்இல்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெருளல் பொல்லாக் காட்சி என்று
உள்ளந் தன்னில் உதிப்பன மூன்றும் எனப்படும்.
"பத்து வகையால் பலன் தெரிபுலவர்
இத்திறம் படரார் படர் குலர் ஆயின்
விலங்கும், பேயும், நரகரும் ஆகி
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர்
நல்வினை என்பது யாது என வினைவின்"

நல்வினை என்பது மேற்கூறப்பட்ட பத்து குற்றங்களினின்று நீங்கி ஒழுக்கத்தை மேற்கொண்டு தானம் செய்து மேலான பிறப்பு என ஆன்றோரால் உரைக்கப்பட தேவர், மக்கள், பிரமர் (கடவுள்) பிறவி எடுத்து நல்வினைப் பயனை அடைவர்.

"சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கி
சீலம் தாங்கி தானம் தலை நின்று
மேல் எனவகுத்த ஒரு மூன்று திறத்து
தேவரும் மக்களும் பிரமரும் ஆகி
மேவிய மகிழ்ச்சியின் வினைப் பயன் உண்குவர்.

இலக்கியம் காட்டும் நல்வாழ்வுக்கான வழிமுறைகளை மேற்கொள்ளப்பட்டது போல் பழம் இலக்கியங்களில் எண்ணற்றதாக சிறந்து காணப்படுகின்றது. தமிழ் ஏன் செம்மொழியாக உலகோரால் தற்போது ஏற்றுக் கொள்ளப் பட்டது என்றால் உலகார் மகிழ்ச்சி வாழ்வுக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முதலே தனக்கென தனியான இலக்கிய இலக்கணத்தை வகுத்து தற்போதும் அவை நடைமுறையில் பொருந்துவனவாயும்நிலைத்து நிற்பனவாயும் எல்லோராலும் ஏற்கப்பட்டு இருப்பது ஆகும்.

திரு.விக்கினேஸ்வரமூர்த்தி
ஆசிரியர்



# யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாய நிலத்துண்டாக்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார அமைப்பில் விவசாயம் முதன்மை பெறுகின்றது. இத்தகைய முதன்மை பெறும் விவசாயம் குடாநாட்டில் மட்டுப் படுத்தப்பட்ட நிலவளத்தில் நடைபெறுகின்றது. வரண்ட காலநிலைத் தன்மைகளைக் கொண்டதும் மட்டுப் படுத்தப்பட்ட நில வளத்தில் அதிகளவுசனத்தொகை அமைப்புடையதுமான வலிகாமம் தெற்குப் பிரதேசத் தின் விவசாயமானது அதன் பொருளாதார வளத்தில் ஒரு சிறப்பான அம்சமெனக் கொள்ளலாம். காலமாற்ற ங்களின் அடிப்படையில் பல்வேறு வகைப்பட்ட தொழில் சார் அடிப்படைகளில் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தின் பொருளாதார வளம் பேணப்பட்டாலும் அதிகளவு மக்களால் மேற்கொள்ளப்படுவதும் அதிக வருவாயை அளிப்பதுமாக இருப்பது விவசாயமேயாகும்.

வலிகாமம் தெற்கு பிரதேச பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்துறையில் 244.40 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. 763 ஹெக்டேயர் நிலப்பரப் பில் மேட்டுநிலப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின் றது. சனத்தொகை பெருகிச் செல்லும் அதேவேளை மனிதத் தேவைகளும் கூடிக்கொண்டு செல்ல நிலத் தின் தேவை அதிகரித்துச் செல்கின்றது. நிலம் வரையறுக்கப்பட்டதொரு வளமாகையால் மனிதனு டைய தேவைக்கேற்ப அதிகரிக்கமாட்டாது. இதனால் விவசாயநிலமானது துண்டு துண்டாகப் பிரிக்கப்படு வதோடு நிலப்பற்றாக்குறை ஏற்படுகின்றது.

விவசாய நிலமானது கடந்த பத்து ஆண்டுக் காலப்பகுதியில் பல வகைப்பட்ட நிலப் பயன்பாட்டு தேவை கருதி மாற்றமடைந்து காணப்படுகின்றது. அதாவது விவசாயநிலமானது குடியிருப்புத் தேவைக் காகவும், வர்த்தகத் தேவைக்காகவும், கைத்தொழில் மையம் சார்ந்த தேவைக்காகவும் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்துள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச நிலவுடமை அளவுகள் சிற்றுடமைத் தன்மை உடையவையாக உள்ளன. இன்று நிலவுடமை யளவுகளும் பரம்பல் ஒழுங்கு களும் தொடர்ச்சியாக மாறு பாடுகளுக்குள்ளாவதைக் காணலாம். இற்றைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலப்பரப்புக்களை இன்று காணமுடியாது. சனத் தொகைப் பெருக்கத்தால் வளமான தோட்ட நிலங்கள் கூட துண்டாடப்பட்டு குடியிருப் புப் பகுதிகளாகவோ வர்த்தக நிலைய மையங்களாகவோ, கைத்தொழில் மையங்களா கவோ வேறு தேவைகளுக் காகவோ மாற்றம் பெற்று வருகின்றமையைக் காண முடிகின்றது.

நகர மயமாக்கலின் காரணமாகவும் போக்கு வரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக காங்கேசன்துறை வீதியானது தற்போது ஏழு மீற்றர் அகலமாக விருத்தி செய்யப்பட்டதன் காரணமாகவும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சிறு வீதிகள் புனரமைக்கப்பட்டதன் காரணமாகவும் இங்கு விவசாய நிலப்பரப்பு குறை வடைந்து கொண்டு செல்கின்றது.

சமூகக் காரணிகளினடிப்படையில் குடாநாட்டு மக்களின் பாரம்பரிய பழக்கவழக்கமான சீதனம் கொடு த்தல், நன்கொடை கொடுத்தல், முதிசம் கொடுத்தல், ஈடுபிடித்தல் என்பன நிலவுரிமைகளில் மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன. தமிழ் மக்களிடையே எல்லா ப்பிரிவினர் மத்தியிலும் பெண் பிள்ளைகளுக்குச் சீத னம் கொடுக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. பிள்ளைகளிடையே மனவேறுபாடுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் இருக்கும் நிலவுடமைகளை சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் முறையை அவதானிக்கலாம். இதனால் நிலவுரிமையில் மாற்றம் ஏற்படுவதோடு நிலவுடமை அளவுகள் தொடர்ச்சியாகக் குறைவடை கின்றது.

சீதனம் கொடுக்கும் போது காணிகள் பெறுமதி களின் அடிப்படையில் நிலம் துண்டாடப்படல் தவிர்க்க முடியாததாகின்றது. ஒருவர் சிறுசிறு பரப்பளவுகள் கொண்ட நான்கைந்து நிலவுடமைகளைக் கொண்டவ ராக இருந்து அவற்றை ஒவ்வொன்றாக ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் கொடுக்க எண்ணினாலும் அவற் றில் ஒரு நிலம் பெறுமதிமிக்கதாக இருக்கும் போது அந்நிலம் தமக்கு வேண்டுமெனப் பிள்ளைகள் கட்டாய ப்படுத்துவதும் அதன் காரணமாக அதைப் பங்கிட வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றமையும் தவிர்க்க முடியாததாகின்றது. இதனால் நிலமானது துண்டா டப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நகர்ப்புறங்களுக்கு அண்மையான பகுதிகள், போக்குவரத்துக்கு இலகுவான பகுதிகள், விளைச்சல்

அதிகமான நிலவுடமைகள் என்பன பெறுமதி மிக்கன வாகக் கருதப்படுகின்றன. இவை பிள்ளைகளிடையே பங்கிடப்படுவதனால் நிலமானது உட்பிரிவு படுத்தப்படு கின்றது. இந்த வகையில் விவசாய நிலவுடமைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அண்மைக்காலங்களில் விவசாய நிலவுடமைகள் வீட்டுநிலங்களாக மாற்றம் பெற்று வரும் போக்குகளும் காணப்படுகின்றன. வசதியான இடங்களில் வீடுகள் அமைய வேண்டும் என்ற நோக்கில் வளமான தோட்ட நிலங்களைக்கூட வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்து கின்றார்கள். கூடுதலாக இணுவில் மேற்கு, இணுவில் வடகிழக்குப் பகுதிகள் சங்குவேலி, சுன்னாகம் தெற்கு, ஈவினைப் பகுதி ஆகிய பிரதேசங்களில் சீதனம் கொடுப்பதனூடாக நில உரிமைகளில் மாற்றமேற்பட்டு நிலம்துண்டாடப்படுவதனை அவதானிக்க முடிகின் றது.

முதிசம் கொடுத்தல் தமிழ்மக்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களில் ஒன்றாகும். இதனால் ஆய்வுப் பிரதேச நிலவுடமைகளில் மாற்றங்கள் நிகழ்ந் திருக் கின்றன. பெண்பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுப்பது போல் ஆண்பிள்ளைகளுக்கு முதிசம் கொடுத்தல் யாழ்ப்பாணத்து வழக்கம். அதாவது பெற்றோரின் பெயரிலிருந்த நிலவுடமை பெற்றோர் இறந்த பின்னர் ஆண்மகனுக்கு உரிமை மாறுகின்றது. இதுதான் முதி சம் கொடுத்தலாகும். அதாவது சொத்துப்பேறு சட்டங்க ளினால் நிலத்தின் உரிமை ஆண்மகனுக்கே சொந்த மாகின்றது. இதனால் நிலங்கள் துண்டாடப்படுவதாக வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் அவதானிக்க முடிகின் றது.

இப்பிரதேசங்களில் அதாவது கூடுதலாக புன்னா லைக்கட்டுவன் தெற்கில் நிலம் துண்டாடப்பட்டு வரு கின்றது. அங்கு கூடுதலான விவசாயிகள் கடின உடல், உழைப்பு, வயோதிபம் மற்றும் நோய் காரணமாக இறந்துள்ளமையால் அந்நிலம் ஆண்மக்களுக்கு உரிமையாகின்றதை அவதானிக்க முடிகின்றது.

நன்கொடை கொடுத்தல் என்பது ஒருவர் தனக் குரிய நிலத்தை அன்பு, பாசம் காரணமாகத் தான் உயி ருடன் இருக்கும் போதே எழுதிக்கொடுத்தல். அதாவது பெற்றோர் உயிருடன் இருக்கும் போது பிள்ளை களுக்கு எழுதிக் கொடுத்தல் போன்றவற்றை நன் கொடை எனக்கூறலாம். சுன்னாகம் மேற்கில் அதிகள வான நிலம் நன்கொடை கொடுத்தல் காரணமாக நில உரிமை மாற்றமடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஈடுபிடிக்கும் முறைகளினாலும் நிலவுரிமைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வறுமை நிலையில் வாடும் மக்கள் தமது தேவைகளையொட்டி காணி களை ஈடுவைக்கும் முறை தேசவழமைச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றது. இத்தகைய காணிகளை ஈடு வைத்தவர்கள் வட்டியையும் முதலையும் செலுத்தி முடிக்க முடியாமல் காணிகளை இழந்த சம்பவங்களும் உண்டு. வட்டிக்குப் பணம் கொடுப்போர் தம் இஷ்டப்படி யெல்லாம் வட்டி வசூலித்த நிலமைகளும் குடாநாட்டில் நிலவின. வட்டிக்குப் பணம் கொடுப்போர் காணிகளை ஈடாகக் கேட்பதும், வாழவழியற்ற ஏழை விவசாயிகள் எப்படியாவது பணம் பெறவேண்டும் என்ற நோக்கில் ஈடுவைப்பதும் வட்டி வீதங்களை பணம் கொடுப்பவர் தம் இஷ்டப்படி தீர்மானித்துக் கொள்வதும் அவதானி க்கப்பட்டுள்ளது. எனவே அதிக வட்டியில் காணி ஈடுபிடி க்கப்பட்டு தமது ஈட்டை மீள முடியாமல் நிலவுடமை களை இழந்த சம்பவம் ஈவினைப்பகுதியில் நேர் காணல் மூலம் அறியப்பட்டுள்ளது. இதன் மூலம் நில வுரிமைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் நிலமானது துண்டாடப்பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

விவசாய நிலவுடமைகள் சிறுசிறு துண்டுகளாக மாற்றத்திற்குள்ளாகி வருவதனால் நிலவுடமையின் பெறுமதி அதிகரித்து பெண் பிள்ளைகளுக்கு சீதனம் கொடுப்பதற்கு பணம் தேவை என்பதனால் விவசாய நிலத்தை அநேகம் பேர் விற்றும் இருக்கின்றனர். இந்நிலத்தை கொள்வனவு செய்தவர்கள் வீடுகளை அமைத்துக் கொண்டமை மருதனார்மடத்தை அண்டிய பகுதிகளில் அவதானிக்க முடிந்தது. கூடுதலானவர் கள் நகரங்களுக்கண்மையாக வீதிகளுக்கண்மை யாக நிலவுடமைகளைத் தேடிப் பெறுவதில் ஆர்வம் காட்டினார். இத்தன்மைகளால் சிறந்த விவசாய நிலவுடமைகள் கூட கூடிய பணத்தொகைக்கு விற்பனைக்குள்ளாகியி ருக்கின்றன.

மேலும் பொருளாதாரக் காரணிகளின் அடிப்படை யில் இன்னொரு வகையிலும் நிலம் துண்டாடப்படுகின் றது. அரசாங்கத்தினால் விவசாயத்துறைகளில் வழங்கும் கடன்வசதிகள், பயிர்க் காப்புறுதித் திட்டங் கள் மற்றும் மானிய அடிப்படையில் வழங்கப்படும் விதை, உரம் என்பவற்றைப் பெறும் நோக்குடன் தோட்ட நிலங்களைச் சிறுசிறு துண்டுகளாக வகுத்து வயதுவந்த பிள்ளைகளின் பெயரில் பதிவு செய்து வைக்கும் முறையுள்ளது. சங்குவேலிப் பிரதேசத்தில் நேர்காணல் மூலம் அறியப்பட்டுள்ளது. இதனால் நிலங்களின் உரிமை மாற்றமடைந்து நிலத்துண்டாக்கம் ஏற்படுகின்றது.

இவ்வாறு விவசாய நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றம், நிலவுடமையின் அளவில் ஏற்பட்டு வரும் மாற்றம், நிலவுரிமையில் ஏற்பட்டுவரும் மாற் றம் என்பன விவசாய நிலமானது துண்டாடப்படுவதற் குக் காரணமாக அமைகின்றன. இதனால் விவசாயிக ளின் நிலம் சிறுசிறு துண்டுகளாக பிளவுபட்டு இருக்கின் றமையால் சிறிய நிலங்களில் இருந்து எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாத நிலை காணப்படுகின் றது.

அ.யோகினி

ஆசிரியை

# ஒளி விழா










யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வானது மன்றத்தின் தலைவி சங்கனி.யோகானந்தம் தலைமையில் 30.11.2019 சனிக்கிழமை காலை வெகுசிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் வட்டு மத்திய கல்லூரி அதிபர் திருமதி. புஸ்பராணி பஞ்சாட்சரம் அவர்களும் சிறப்பு விருந்தினராக மாதகல் சென்தோமஸ் றோ.க.பாடசாலை அதிபர் திருமதி F.R.J.ஜெயந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வுகளின் வரிசையில் அருட்தந்தை. தேவமித்திரன் அவர்களால் திருவார்த்தை விளக்கம் வெளிப்படுத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு அருட்பணி ஆ.மனுவல் அவர்கள் ஆசியுரை வழங்கினார். ஆசிரியர் சார்பில் ஆசிரியர் திரு ம.ஜோன்சன் மரின் உரை நிகழ்த்தினார்.

மாணவர்களின் குழுப்பாடல், நடனம், நாடகம், உள்ளிட்ட நிகழ்வுகள் சிறப்பான வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. வலிகாமம் கல்விவலய ஒளிவிழாவில் எமது பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டமை தனிச்சிறப்பாகும். இந் நிகழ்வுகள் யாவும் மன்றப் பொறுப்பாசிரியர் திரு.A.R.விஜயகுமார் ஆசிரியர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் சிறப்பாக நடைபெற்றன.



## ஆளுமை மிக்க மாணவி
## தர்சிகா

செல்வி தர்சிகா முருகராசா யா/பண்டத் தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததைத் தொடர்ந்து தரம் 6 இல் இணைந்து கொண்டார். பாடசாலையில் கல்வி மற்றும் கல்விசார் போட்டிகள், இணைபாட விதான செயற்பாடுகள் பலவற்றிலும் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். இவர் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு 2015இல் தோற்றி 6A, 2B, C பெறுபேற்றை எடுத்து உயர் தரத்தில் கலைத்துறையை தெரிவு செய்திருந்தார்.

கலைத்துறையில் வரலாறு, பொருளியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் முதலிய பாடங்களை விரும்பிக் கற்றார். இவர் பாடசாலைசார் போட்டிகளிலும் ஏனைய பேச்சு, விவாதம் போன்ற நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். கலாசார திணைக்களம் ஊடாக நடைபெற்ற விவாதத்தில் இவரைத் தலைவராகக் கொண்ட பண்டத்தரிப்பு மகளிர் அணி மாவட்ட மட்டம் வரை சாதனை புரிந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வரலாற்றில் முதன் முறையாக மாணவர் பாராளுமன்றம் ஒழுங்கமைக்கப்பட்டது. இம் மாணவி பாராளுமன்றத்தில் மாணவர் வாக்குகளால் முதலாவது சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் பாடசாலையில் இடம்பெறும் ஆங்கில மற்றும் சிங்கள காலைப் பிரார்த்தனையை இவர் தலைமையேற்று நடத்தியிருந்தார். தன்னுடைய ஆங்கில ஆளுமையாலும் தலைமைத்துவ பண்பாலும் ஆங்கில மன்றத்திற்கு தலைவராக இருந்து இக் காலைப் பிரார்த்தனையை சிறப்பாக நடாத்திக் காட்டினார். மேலும் மாணவத் தலைவர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் 2018ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றி சிறப்பான ஆளுமையை வெளிப்படுத்தி இருந்தார். இப்பரீட்சையில் இவர் 3A பெறுபேற்றுடன் மாவட்ட நிலையில் 18ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும், குடும்பத்தினருக்கும் பெருமை சேர்த்தார். இப்பெறுபேற்றின் விளைவாக கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சட்டக்கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பைப் பெற்று வெற்றிகரமாகத் தன்னுடைய கற்கையை தொடர்கிறார். ஊக்கத்தோடு முயன்று கற்றால் உயர்நிலை அடையலாம் என்பதற்கு சான்றாக தர்சிகா திகழ்கிறார்.

மு.கயானா
2021 கலை

# வாழக்கல்

## (வாழ்க்கைக்கு கல்வி அவசியம்)

"தாயின் கருவறையிலிருந்து இறங்கி கல்லறை வரை நடக்கும் தூரம் தான் மனித வாழ்கை" இந்த குறுகிய காலப்பகுதிக்குள் தான் மனிதனின் எல்லா நாடகங்களும் அரங்கேற்றப்படுகின்றது. இக்காலப் பகுதியில் மனிதன் தேடி அலையும் செல்வங்கள் பல. அவற்றில் நிலையான செல்வமே கல்விச் செல்வமா கும். இதையே வள்ளுவன் குறிப்பிடும் போது
"கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவருக்கு மாடல்ல மற்றயவை" (குறள் 400)

அதாவது கல்வியே அழிவு இல்லாத சிறந்த செல்வம். பிற எல்லாம் செல்வமே அல்ல எனக் குறிப்பிடுகிறார். இச் செல்வம் எம்மோடு நிலையாக கூடிவரும் இது இப் பிறப்பில் மட்டுமல்ல ஏழேழு பிறப் பிற்கும் எம்மை தொடரும் இதை வள்ளுவன் குறிப்பி டும் போது
"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு எழுமை யும் ஏமாப்புடைத்து" (குறள் 398)

அதாவது ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்புக்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு எழு பிறப்பிற்கும் உதவும் தன்மையுடையது எனக் குறிப்பி டுகிறார். இவ் நிலையான செல்வத்தை தேடுவதை விட்டு இன்றைய மனித வாழ்கையானது அற்ப சொற்ப விடயங்களுக்கு ஆசைப்பட்டு அதற்கு பின்னால் வால் பிடிக்கும் வறட்டுத்தனமான மனிதர் களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கல்வியின் மகத்துவத்தை உணராது, அறியாது கற்கும் காலத்தை கைநழுவ விட்டுவிட்டு காலம் கழிய கவலைப்படும் மனிதர் பல எம் கண்முன் உளர்

"கல்வியே எமது வாழ்க்கையின் சிறந்த முதலீடு" அதை அடைவதே எமது வாழ்க்கையின் குறிக் கோளாக இருக்கவேண்டும். அதை பெற்றுக் கொள்வ தற்கு எத்தகைய நொண்டி சாட்டுக்களையும் நாம் அடுக்கக் கூடாது. இவ் உலகில் யாருக்கு துன்ப மில்லை யாருக்கு கஸ்ரமில்லை இவ்வுலகில் குறை கள் இல்லாத மனிதன் கிடையாது இன்பமும் துன்ப மும் மனிதவாழ்கையின் சக்கரங்களாகும் அவை கால மாற்றத்திற்கேற்ப மாறிக்கொண்டே போகும். ஆகவே கற்பதற்கு எத்தகைய சாட்டுக்களையும் முன்வைக் கூடாது இதனால் தான் மூத்தோர்கள் "பிச்சை புகினும் கற்கை நன்றே" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பள்ளி வாழ்க்கையை பாழாக்கிவிட்டு பட்டுணர்ந்த மனிதர் பலர் இந்த பரணியில் உளர். இவர்களின் வாழ்கையின் அனுபவங்களை நாம் உள்வாங்கி கொள்ள வேண்டும் கல்வி மகத்துவத்தை உணர வேண்டும்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள் 397)

அதாவது கற்றவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடாம் எல்லா ஊரும் சொந்த ஊராம் இதைத் தெரிந்தும் ஒருவன் இறக்கும் வரை கூடக் படிக்காமல் இருப்பது ஏன்? என வள்ளுவனுக்கே இச் சந்ததி பற்றி சந்தேகம் எழுகின்றது .

இன்றைய உலகில் பலர் மனதில் குறிப்பாக இளைஞர்கள் மனதில் எழும் கேள்வி வாழ்க்கைக்கு பணம் இருந்தால் மட்டும் போதாதா? படிக்க வேண்டுமா? என்பதாகவே இருக்கின்றது. நாற்பணம் கையில் கண்டதும் கைப்பையை (பள்ளிபை) காமையில் தூரம் வீசிவிடும் மூடர்களாக இன்றை மாணவர்கள் உருவாகிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியவில்லை.
"நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே கல்லார் கண் பட்ட திரு" (குறள் 408)

அதாவது முட்டாள்களிடம் குவிந்த செல்வமானது நல்லவர்களை வாட்டும் வறுமையைவிட அதிகம் துன்பம் தருமென்று. செல்வம் என்பது அதன் பெயருக்கு ஏற்றாற்போல சொல்லாது சென்றுவிடும் அதன்மேல் ஆசைகொண்டு நிலையான செல்வத்தை (கல்வி) கைநழுவவிடக்கூடாது. வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவெடுக் கும் ஒரு காலப்பகுதியாகும். ஆகவே சரியான காலப் பகுதியில் சரியான முடிவெடுக்க தெரியவேண்டும் காலத்தை தவறவிட்டு விட்டு மனம் நொந்து பயனென்ன இதைத் தான் கூறுவார்கள் "வாழ்க்கை என்பது புரியாத போது தொடங்குகிறது புரிகின்ற போது அது முடிந்து விடுகிறது" என்று நேரம் பொன்னானது அதை மண்ணாக்க எத்தனிக்க கூடாது. சந்தர்பங்கள் எங்களை தேடி வரும் வரை காத்திருக்காதீர்கள் சந்தர்பங்களை உருவாக் குங்கள் (Don't wait for opportunity. Create it) **இது கற்களை எண்ணி கணிதம் படிக்கும் காலம் அல்ல கணணியில் கணிதம் படிக்கும் காலம்.** வலிமையும் திறமையும் விடாமுயற்சியும் உள்ளவனே இவ்வுலகில் போட்டி போட முடியும் ஆகவே "ஓதுவது தொழியேல்" என்ற ஔவையின் கூற்றிற்கிணங்க ஓதும் பழக்கத் திற்கு ஒருநாளும் ஓய்வு கொடுக்காதீர்கள் **எட்டி பிடிக் கும் தூரத்தில் வெற்றி இல்லை அதை விட்டுவிடும் எண்ணமும் எனக்கில்லை** என்ற வைராக்கியத்தை உங்கள் மனதுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள். வறுமை உங்களை வாட்டினாலும் துன்பம் உங்களை துரத்தினாலும் கல்வியை கைவிடாதீர்கள் கற்றுக் கொண்டே இருங்கள்.
விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லை எரு (சேகுவாரா)

வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் உலம் இது கற்கும் மனிதர்களை இவ் சமுதாயம் பலவாறு தூற்றக் கூடும் சாகும் வயதில் படிக்கிறான் என்றும். காலத்தை வீணாக கரைக்கின்றான் என்றும். பலவாறு கிண்டல டிக்கும். ஏன்? கிரேக்க புகழ்பெற்ற தத்துவ ஞானி களையே (அரிஸ்ரோட்டில், பிளேட்டோ, சோக்கிரட்டீஸ்) "இருட்டறையில் கறுப்பு பூனையைத் தேடி அலையும் குருடர்கள்" என்று தூற்றிய உலகம் இது நீங்கள் எம்மாத்திரம். தூற்றுவார் தூற்றட்டும் போற்றுவார்

போற்றட்டும் நீ உனது இலக்கை நோக்கி விரைந்து கொண்டே இரு உங்களால் பறக்கமுடியாவிட்டால் ஓடுங்கள் ஓட முடியாவிட்டால் நடந்து செல்லுங்கள். நடக்கவும் முடியாவிட்டால் தவழுங்கள் இலக்குகளை நோக்கி சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதே முக்கியமானது (ஹிட்லர்)

எம்மில் பலர் பரீட்சைக் காலங்களில் தொடர்ந்து தோல்விகளை சந்தித்துவிட்டால் துவண்டுவிடுவதுண்டு கல்வியில் மனம் வெறுத்துவிடுவதும் உண்டு சாதனைகள் படைக்கவேண்டுமென்றால் சோதனைகளைத் தாண்டித்தான் செல்ல வேண்டும் இன்று நம்மத்தியில் புகழின் உச்சியில் இருக்கும் பல விஞ்ஞானிகள், சாதனையாளர்களின் வாழ்க்கையை புரட்டிப்பார்த்தால் எத்தனை சோதனை எத்தனை வேதனை இவற்றை கடந்துதான் சாதனைகள் படைத்தார்கள். இதனால் இன்றும் நீங்காது எங்கள் நெஞ்சில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் வாழுவார்கள். எல்லோக்கும் தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை கண்டு பிடித்தார் என்பது தான் நம்மில் பலர் அறிவர் இவ் சாதனை எத்தனை சோதனைகளை தாங்கி வந்தது என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவர்.

"என்ன நடந்தாலும் எதை இழந்தாலும் சோர்ந்து போகமாட்டேன் காரணம் நான் 100 வெற்றிகளை பார்த்தவன் அல்ல நான் 1000 தோல்விகளை பார்த்தவன்" (தோமஸ் அல்வா எடிசன்)

என்ற எடிசனின் கூற்றே சான்று. ஆகவே கல்லுங்கள் கற்றுக் கொண்டே இருங்கள் அதில் ஐயம் எதுவும் வேண்டாம். ஆனால் நீங்கள் கற்ற கல்வி உங்களையும், உங்கள் சமுதாயத்தையும், உங்கள் நாட்டையும் வாழ வைக்கும் கல்வியாக இருக்கவேண்டும். கவிஞர் வைரமுத்து கூறியதைப் போன்று "**கையொப்பம் இடத்தெரிந்த மரங்களை உருவாக்குவதாக உங்கள் கல்வி அமைந்துவிடக்கூடாது**" "கற்றோம் என்பதை விட நாம் அனுபவத்தை பெற்றோம் என்பது தான் சிறந்தது" என அனுபவக் கல்வியின் தந்தை ரூஷோ குறிப்பிட்டுள்ளதை மறந்துவிட முடியாது. ஆகவே வலியோடு போராடினால் தான் ஒரு பெண் தாயாக முடியும் இருளோடு போராடினால் தான் புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும். மண்ணோடு போராடினால் தான் விதை மரமாக முடியும். வாழ்கையோடு போராடினால் தான் நீ வரலாறு படைக்க முடியும். எனவே வாழ கல்லுங்கள் வாழ்வை வெல்லுங்கள்

ஆக்கம்

ஆசிரியர்- **M.Johnson (BA,NDT,NDE,Dip in Psy, LLB(R))**

★ ★ ★

# தாய் அன்பு



அமுதூறும் இனியசொல் அம்மா. இதுவே குழந்தையின் முதல் வார்த்தையாகும். நமக்குஎன்றும் இனிமையாக விளங்குபவள் தாயாவாள். தாயின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஈடாக உலகில் எதுவும் இல்லை. "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை" என்றும் "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்றும் அன்னையை முன்வைத்து சிறப்பித்துப் பாடியுள்ளார் ஔவையார்.

"பெற்றதாயும்பிறந்தபொன்னாடும்நற்றவானிலும்நனிசிறந்தனவே" என்று பாரதியார் போற்றுகின்றார். பத்துமாதம் சுமந்துபெற்றெடுத்து பாலூட்டி சீராட்டிப் பகலென்றும் இரவென்றும் பாராமல் கண்விழித்து வளர்ப்பவள் தாயாவாள்.

"ஐயிரண்டுதிங்களாய் அங்கமெல்லாம் நொந்து
பெற்றதன் பயனென்றபோதே பரிந்தெடுத்து செய்யவிரு
கைப்புறத்தில் ஏந்திகனகமுலை தந்தவள் தாயாவாள்"
என்பதை பட்டினத்தடிகளும் விதந்து கூறியுள்ளார்.

"ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைத்தாங்கி நீபட்ட பெரும்பாடு அறிவேனம்மா" என தற்கால கவிஞரும் பாடியுள்ளார்.

பிள்ளைகள் தாயின் அன்பான, பாசமான கட்டுப்பாட்டை மீறமுடியாமல் அவள் வார்த்தைக்கு கட்டுப்படுகிறார்கள். அதன் மூலம் பிள்ளைகளை நல்வழிப்படுத்த முனைகிறாள். அவர்களை உயர்ந்தவர்களாக, உத்தமர்களாக வாழ வைக்கிறாள். தனது பிள்ளைகளைச் சான்றோர் ஆக்குவதே அவளது உயர் இலட்சியமாகும். தம்பிள்ளைகள் சான்றோர் எனப் பிறர் வாயால் சொல்லக் கேட்பதையே அவள் விரும்புவாள் என்பதை

"ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்ற வள்ளுவர் வாய்மொழி மூலம் அறியலாம்.

தம் பிள்ளை பொல்லாப் பிள்ளை என்ற பெயரை பிறர் வாயால் கேட்பதை அறவே விரும்பமாட்டாள். எந்தக் குழந்தையும் நல்லகுழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற கவியரசு கண்ணதாசனின் பாடலிலிருந்து பிள்ளை வளர்ப்பில் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. பிறரிடம் காட்டும் அன்பும் அறிவும் தாயிடம் பூத்த பண்புகளாகும்.

முற்றும் துறந்த முனிவர்கள் தாயை மறந்தவர்கள் அல்லர். "காதற்ற ஊசியும் வராது காண் கடைவழிக்கே" என்று உணர்ந்த பட்டினத்தடிகள் சுகபோக வாழ்வை நீக்கி காடு மேடு எல்லாம் திரிந்தவர். அவர் தம் மெய் உணர்வினால் தாய் இறந்த நிலையறிந்து கதறி அழுதார். தாய்க்குச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியையை முன்னின்று நடத்தினார். ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்ற தாயை நினைந்து, கசிந்து கண்ணீர் மல்கி உருகிப்பாடினார்.

"முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென்னிலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூழ்க மூழ்கவே" என்று பாடித் தன் இறுதிக் கிரியையினை நிறைவேற்றினார்.

பட்டினத்தார் பற்றற்ற நிலையிலும் அன்னைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியையை முடித்த பெருமைக்குரியவர். எனவே தாயின் அளவற்ற அன்பை என்றும் பேணிவளர்த்து மகிழ்ச்சியும் பெருமையும் பெறுவோம்.

இராஜகோபால் சன்ஜித்
தரம் 5 (2019)

# கலையும் வாழ்வும்

மனிதனின் வாழ்வியலானது அழகியல் உணர்வுடன் பின்னிப் பிணைந்தது. மண்ணில் இருந்து உருவான மனிதன் பிரபஞ்சத்தின் உன்னத உயிரி. அவன் பிரபஞ்சத்துடன் இணைந்து, ஊடாடி, பயணிக்க வேண்டியவன். அவன் பிரபஞ்சத்திலுள்ள பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவற்றைத் தன்னுள் கொண்ட பிரபஞ்ச உயிரியாவான். இயற்கையோடு இசைந்து ஆடியும், பாடியும், ஓடியும், உலாவியும், அசைந்தும், புரண்டும் அவன்தன் வளர்ச்சிப்பரிமாணங்களில் மாறுதல் அடைகின்றான். இத்தகைய இயக்கம்தான் காலப்போக்கில் கலை என்றும், கலைத்துவம் என்றும், கலைஞன் என்றும் மனிதன் வாழ்வில் பல்வேறு நிலைகளாக மாற்றங் கண்டன.

மனிதன் ஓசை எழுப்பினான். அந்த ஓசைக்கு ஏற்ற அங்க அசைவுகளைப் புலப்படுத்தினான். ஓசைகளைக் கட்டுப்படுத்தும் தாளக் கட்டுக்களை அளவிட்டான். அத்தாளக் கட்டுக்களுக்கேற்ப அங்க அசைவுகளை நெறிப்படுத்தினான். இவ்வாறாக அவன் தானாகவே "கூத்து" எனும் ஆடல் வடிவத்தை கலை வடிவமாக்கி கூடி மகிழும் வேளையிலும், வெற்றிக்களிப்பின் போதும், தொழில்களைப்பின் போதும் புத்துணர்வு பெற்றான் என்பதை மானிடவியல் வரலாற்றுப் பின்னணியை புரட்டிப் பார்க்கும் போது நாம் காணலாம்.

மனிதன் பிறக்கும் போதும், பிறந்த பின்பும், உண்ணும் போதும் விளையாடும் போதும் உறங்கும் போதும் ஏன் மரணத்தின் போதும் கூட கலையைப் பயன்படுத்தினான். ஆணுக்கும், பெண்ணுக்கும் என பால்வேறுபாடுகளைப் புலப்படுத்தும் பாடல்களும், ஆடல்களும், கூத்தும், நாடகமும், நடனமும் என இக்கலை வெவ்வேறு பரிமாணங்களை எடுத்துள்ளது.

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது அங்கே ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது என வேலைக்களைப்பை நீக்கவும் பால் சமத்துவத்தைப் பேணவும் பாடல் வடிவில் தாலாட்டு, ஒப்பாரி, குரவை, மீன்பிடி, அரிவி வெட்டுப்பாடல், ஊஞ்சற்பாடல், பாப்பா பாட்டு என ஒரு வகையும் கும்மி, காவடி, கோலாட்டம், கரகம் எனும் ஆடல் ஒரு வகையும், வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு, காமன்கூத்து, வசந்தன்கூத்து, கோவலன் கூத்து என ஒரு வகையும் சமூக நாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடகம், நவீன நாடகம், யதார்த்த, யதார்த்த விரோத நாடகம் என ஒரு வகையும் இவற்றை விட நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் என்பதை பயன்படுத்தி வெள்ளித்திரை, சின்னத்திரை, முப்பரிமானக் காட்சி என நவீன கலை ஒரு வகையும், சிற்பம், ஓவியம், சித்திரம் என ஒரு வகையும், கவிதை, சிறுகதை, தொடர்கதை, வரலாற்றுக்கதை, புனைக்கதை எனப் பல்வேறு கோணங்களில் இக்கலையின் முகங்கள் வெளிப்பட்டுக் காணப்படுகின்றன.



இவை மனித வாழ்வியல் விழுமியங்களையும், பெறுமானங்களையும், விழிப்புணர்வையும் சுதந்திரம், தன்மானம், நீதி, நேர்மை, சத்தியம் போன்ற அகம் சார்ந்த, புறம் சார்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்ற காலத்தின் கண்ணாடிகளாகத் திகழ்கின்றன.

மனிதன் என்ற உயிரிகளால் மட்டும்தான் கலையை இரசிக்க, கலையை வளர்க்க, கலையை விருத்தி செய்ய முடியும். கலை மனிதனால் வாழ்கின்றதா? மனிதன் கலையால் வாழ்கின்றானா? என்று வினாவினால் விடை இவ்விரண்டும் ஒன்றிலே ஒன்று தங்கி, ஒன்றின் இருப்புக்கு மற்றொன்று துணை போகின்றது என்பது தான் உண்மை. மனிதனின் பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பாதுகாக்கும் ஊடகமாகவும், கடத்தும் ஊடகமாகவும் கலை விளங்குகின்றது.

இனம், மதம், மொழி, நிறம் என்ற பேதங்களை எல்லாம் கடந்து கலை, கலைஞன் ஒன்றிணைவதுதான் வாழ்வும் கலையும் கொண்டுள்ள பிணைப்பு கலையைப் புரிந்து கொள்ள மொழி என்பது அவசியமில்லை.

இயற்கையோடு இணைந்த மனிதனின் உடலியக்கத்தின் ஓசையும், காற்று வீசுகின்ற நாதமும் மழைத் துளி விழுகின்ற ஒலியும் கடலலையின் தாளமும் இணைத்துப் பார்த்தால் இவையாவும் ஓர் கட்டமைவுக்குள்ளே ஒலி எழுப்புவதை உணர முடிகின்றது.

அதிகாலை வானின் கீழ்த்திசை நிறமும், படுவானின் செந்நிறமும் கவிஞனையும், ஓவியனையும் கலைப் படைப்பாக்கத் தூண்டுகின்றது. அழகிய மலரைக்

கண்டதும் வான் வெளியின் சுதந்திரமாகப் பறக்கும் பறவைகளைக் கண்டதும் பாடல் பிறக்கிறது. மயிலைப் போல் ஆடவும், மானைப்போல் துள்ளவும், முயலைப் போல் பாயவும், குரங்கைப் போல் தாவவும், யார் தூண்டுகின்றார்? மேலும் அழகிய ஓர் இளம் பெண்ணைக் கண்டதும் இளைஞன் மனதில் கவிதை துளிர்க்கிறதே யார் இதெல்லாம் தூண்டுவது? இவை யாவும் எம்முள் உறைந்துள்ள கலையம்சத்தின் வெளிப்பாடே.

கலைத்துவமில்லா மனிதனில்லை, ஆனால் எனக்குள் கலையுணர்வு இல்லை என அழுத்திக் கூறும் மனிதன் அப்பட்டமான பொய்யன். இதைத்தான் "இசையால் மயங்கா இதயமில்லை" என கூறுகின்றனர். கலைஞனாகவே மனிதன் பிறக்கின்றான் என்பதற்கு மனிதக் குழந்தைகளே ஆதாரம். பேசத் தெரியா குழந்தை பாடல்கள் கேட்டதும் அதன் ஓசை நயத்தையும், தாள லயத்தையும் சுவைத்து தன் உடலை அசைக்கின்றது. நடமாடுகின்றது. இதை விட வேறு ஆதாரம் என்ன வேண்டும்?

இறக்கும் தறுவாயில் ஆழ்மயக்க நிலையில் இருந்த ஓர் பெரியவர். அவர் தாம் பெரும் தவில் இரசிகன். அவ்வேளை அசைவற்று இருந்த அவர் படுத்திருந்த படுக்கையின் அருகில் தவில் கச்சேரி பதிவு இசை நாடாவை இசைக்கச் செய்யுமாறு வைத்தியர் ஆலோசனை கூறினார். தவில் இசை ஒலி எழுந்ததும். அசைவற்ற உடல் அசைந்தது. அவர் உடலில் இருந்து உயிர் பிரிந்தது. அவர் யாருமல்ல தமிழ்த்தலைவர் தந்தை செல்வா என அழைக்கப்படும் அமரர் S.J.V.செல்வநாயகம் அவர்களே!

எனவே வாழ்வின் விளிம்பில் அல்லது வாழ்க்கையின் பாதையில் வாழும் எவர் பாதையிலும் கலையும் - வாழ்வும் இணைந்தே செல்லும் சக்கரங்கள் என்பதே உண்மை.

A.R.**விஜயகுமார்**
(விஜயன் மாஸ்ரர்)

# சூரியோதயம்

காலையில் சூரியன் உதித்திடுவான்
காணும் இருளை விலக்கிடுவான்
கதிர்கள் பரப்பி எழுந்திடுவான்
கவின் மிகு காட்சி தந்திடுவான்

உலகம் சிறக்க உதவிடுவான்
உயிர்கள் வாழ உதவிடுவான்
வண்ண ஒளியை தந்திடவே
பகலவன் உதயம் செய்திடுவான்

மழையும் வெயிலும் அவனாலே
மலர்கள் மலர்வது அவனாலே
மக்கள் வாழ்வது அவனாலே
மகிழ்ந்து நாமும் அவனை போற்றிடுவோம்.

**ப.வஜீனா**
10A

## சிறுவர் தினம்



2019 சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

## விவசாய விஞ்ஞான அறிவுப் போட்டி

வலயமட்டத்தில் நடைபெற்ற விவசாய விஞ்ஞான அறிவுப் போட்டியில் எமது பாடசாலை யைச் சேர்ந்த சி.அபிராசினி முதலாம் இடத்தையும் பெற்று ச.தாரணி ஐந்தாம் இடத்தை யும் பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்குப்பற்றினர்.


# செம்மொழியான நம் தமிழ்மொழி

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தினும் முன் தோன்றிய மூத்த மொழியாம் நம் தாய்மொழியான தமிழ் மொழி. வேறெந்த மொழிகளுடனும் ஒப்பிட முடியா நிகரில்லா மொழி நம் தமிழ் மொழியாம்.

எத்தனை மொழிகள்! எத்தனை சுவைகள்! இருப்பினும் தமிழ் மொழி போல் மொழியும் இல்லை, சுவையும் இல்லை. இனியும் தோன்றாது. தமிழனென்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா! என்றார் பாரதியார். எத்தேசம் சென்றாலும் தமிழர் என்ற பெருமையை நாம் கூறிக்கொள்வோம். தமிழில் அறக்கருத்துக்கள் கூறும் பலநூல்கள் எழுந்துள்ளன. சங்ககாலத்தில் சங்கம் அமைத்து தமிழ் வளர்க்கப் பட்டது என்பர். அழியும் மொழியில் 32ஆம் இடத்தில் தமிழ் மொழி உள்ளதென ஆய்வுகள் கூறுகின்றன. 21ம் நூற்றாண்டில் இருண்டு வாழும் இச்சுதந்திர பூமியை நம் தாய்மொழி தமிழ் ஒளிமயமாக்கும். தமிழனாய் தொடர்ந்தும் தமிழ்மொழி காப்போம்.

**ட.கிருஷானினி**
10A

# ஆக்கமலர்ச்சியும் ஆசிரியரின் வகிபாகமும்



ஒரு பிள்ளை புதுமையான முறையிலே செயலாற்றுவதனை நாம் சந்திக்கும் வேளைகளில் அதாவது அப்பிள்ளையின் சிந்தனையோ செயலோ வழமையாக நாம் எதிர்பார்க்கும் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டு காணப்படும்போது அப்பிள்ளை ஆக்க மலர்ச்சி உடையதெனக் கொள்கின்றோம். ஒவ்வொரு பிள்ளையையும் கற்பவர்களாகவும், கற்பிப்போராகவும் ஒரே நேரத்தில் மாற்றமுறச் செய்யும் இருபரிமாண அணுகுமுறையே நவீன கல்வியின் வெற்றிக்கு வித்தாக அமையும். ஆக்கமலர்ச்சி என்பதனை சிந்தனையின் ஒரு சிறப்பு வகையாக கொள்ளுதல் விவேகமான செயலாகும். இவ்வகைச் சிந்தனையானது பின்வரும் மூன்று இயல்புகளை உள்ளடங்கியதாகக் கொள்ளப்படலாம்.

1. குறித்த ஆளிடமே முதலில் ஊற்றெடுப்பதாகவும் அதாவது மூலத்தன்மையுடையதாகவும், லாவகத் தன்மை கொண்டதாகவும் இருத்தல்.
2. வழமையான சிந்தனைக் கோலங்களிலிருந்து அல்லது இதுவரை காணப்பட்ட சிந்தனைக் கோலங்களில் வேறுபட்டுக் காணப்படல்.
3. புதுமைத்தன்மை காணப்படல் குறித்த வகையிலான சிந்தனை எனக்கருதும் போது, சில சமயங்களில் இவ்வகைச் சிந்தனையை ஏற்கனவே வேறு சிலர் புலப்படுத்தியிருப்பினும் கூட நாம் குறிப்பிடும் ஆளைப் பொறுத்தவரையில் அவரிடம் இவ்வகைச் சிந்தனை இதற்கு முன்னர் தோன்றியிருக்காவிடின் அது மூலச் சிந்தனையாகக் கொள்ளப்படலாம்.

ஆக்கமலர்ச்சித்தித் திறன் கொண்ட ஒருவர் மூலக் கருத்துக்களையும் பல்வேறு நோக்குகளையும் முன் வைப்பவராகவும் புதிய கோணங்களில் பிரச்சினைகளை நோக்குபவராகவும் காணப்படுவர் என்பது கிறிச்பீல்ட் என்பவரின் கருத்தாகும்.

கில்போட் என்பவர் படைப்பாற்றலை ஒரு சிறப்பு ஆற்றலாகக் காண்கிறார். அறிவாற்றல் அமைப்பு எனும் மாதிரி உரு ஒன்றினை அறிமுகப்படுத்திய கில்போட் குவிசிந்தனை, விரிசிந்தனை என இரு வகைச் சிந்தனைகளைப் பற்றி விளக்குகின்றார். இருவகைச் சிந்தனைகளும் புதிய தகவல்களை, ஆனால் வெவ்வேறு வழிமுறைகளில் தருவதாக குறிப்பிடுகின்றார். குவிசிந்தனையில், சிந்தனைத் தொழிற்பாடானது ஒரேயொரு சரியான தீர்வினை நாடிநிற்கும் எனவும் விரிசிந்தனையானது ஒரு விடயம் தொடர்பாக பல்வேறு தீர்வுகளை வலியுறுத்தும் எனவும் குறிப்பிடுகின்றார்.

லாவகம், மூலத்தன்மை, நெகிழ்ச்சி, விரிவாக்கம் ஆகிய காரணிகள் விரிசிந்தனையில் உள்ளடக்கப் படுகின்றன. மேலும் விரிசிந்தனை ஆனது ஆக்க மலர்ச்சிக்கு மிக, அவசியமான நிபந்தனையே தவிர போதுமானளவு நிபந்தனையல்ல எனவும் கில்பேட் வலியுறுத்தினார். தொகுத்து நோக்கின் ஆக்கமலர்ச்சியானது விரிசிந்தனையின் இயல்புகளைக் கொண்டது எனக் கூறலாம். மனிதன், பிரச்சினை ஒன்றினை எதிர் கொள்ளும் போது அப்பிரச்சினையின் தீர்வு தொடர்பான செயற்பாடுகள் ஆக்கமலர்ச்சியின் வெளிப்பாட்டை புலப்படுத்தும்.

## ஆக்க மலர்ச்சியும் நுண்மதியும்

ஆக்க மலர்ச்சியும் நுண்மதியும் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கிய தொடர்பு உடையன என்னும் கருத்தினைப் பல ஆய்வாளர்கள் முன்வைத்துள்ள போதும் சில முதன்மை உளவியலாளர்களின் ஆய்வடிப்படையிலான கருத்துக்களின்படி இவையிரண்டும் ஒன்றையொன்று தங்கியிருக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. உயர் நுண்மதியை புலப்படுத்துவோர் ஆக்க மலர்ச்சி குன்றியோராகவும் உயர் ஆக்கமலர்ச்சியை புலப்படுத்துவோர் உயர் நுண்மதியை கொண்டிருந்தோராயும் காணப்படலாம்.

## ஆக்க மலர்ச்சியும் கல்விசார் நடவடிக்கைகளும்

ஒவ்வொரு ஆசிரியரும் மாணவரிடத்தே ஆக்க மலர்ச்சியை வெளிக்கொணர்பவராகவே செயற்படல் வேண்டும். எனினும் சில சந்தர்ப்பங்களில் எதிர்மாறான நடைமுறைகளை எமது கல்விச் செயற்பாடுகளில் காணமுடிகிறது. பொதுவாக ஆசிரியர் பிரச்சினை ஒன்றிற்காக மாணவனின் சரியான விடைகளுக்கு வெகுமதியளிப்பவராகவும் அவர்களது பிழையான விடைகளுக்கு தண்டனை அளிப்பவராகவும் தொழிற்படும் போக்கே காணப்படுகிறது. இவ்வகையான போக்கு ஆசிரியர்களிடம் காணப்படுகின்றமையால் புதுமையான முயற்சிகளையோ தாமாக விடையை காணும் முயற்சிகளையோ மாணவர் வெளிக்காட்ட தயங்குகின்றார் என ஜெரோட் புரூணர் எனும் உளவியலாளர் குறிப்பிடுகின்றார். மேலும் இவ்வாறான நிலைமைகளில் புதுமையான முயற்சிகளைத் தவிர்த்தல் பாதுகாப்பான செயற்பாடெனப் பிள்ளைகள் கருதுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

கற்பித்தலானது விஞ்ஞான ரீதியாக ஆற்றப்படும் கலை என்ற வகையில் காலங்காலமாக வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்கு பெரும்பாலும் தமது பலங்கள் மற்றும் பலவீனங்களை சீர்தூக்கிப் பார்த்து பலங்களை மேம்படுத்துவதையும் பலவீனங்களை இயலுமான வரை களைவதையுமே பிரதான நோக்கமாக கொண்டு செயற்பட்டு வந்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது.

மிகவும் எச்சரிக்கையுடன் தீர்வுகளையும் மட்டும் ஆதரிப்பதற்கு பதிலாக படைப்பாற்றலுடன் அல்லது ஆக்கமலர்ச்சியுடன் கூடிய தீர்வு முயற்சிகளை மாண வரிடத்தே ஊக்குவித்து அவற்றிற்கு வெகுமதிகளையும் வழங்கும் பக்குவத்தை ஆசிரியர் அடைந்திருத்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வழமைக்கு புறம்பாக அமை யும் தீர்வுச்சிந்தனைகள் கற்பித்தலின் போது மீள வலியுறுத்தப்பட வேண்டும் அல்லது ஊக்குவிக்கப்பட வேண்டும். எனக்கூறுவதால் வழமையான செம்மை யுடன் கூடிய தீர்விற்கு நாம் மதிப்பளிக்கவில்லை என கருதலாகாது. ஆக்கமலர்ச்சி செயல் ஒவ்வொன்றிலும் இறுதிப்படியாக வாய்ப்புப்பார்த்தல் இடம்பெறுகிறது. அதாவது இறுதித் தீர்வாக ஏற்கப்படுமுன்னர் அது ஏற்புடையதா என சோதித்துப் பார்க்கப்படுகிறது. அது வெற்றியை அளிக்காத சந்தர்ப்பங்களில் நிராகரிக்கப்படு கிறது. நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படினும் கூட புதுமையான கற்பனைத்திறனை வெளிப்படுத்திய செயலுக்காக அப்பிள்ளைக்கு ஒருசிறு பாராட்டாவது வழங்கப்பட வேண்டும். சில சமயங்களில் இத்தோல்வி களே புதிய சிறந்த தீர்வுகளுக்கான புதுச்சிந்தனைகளு க்கு, கருத்துக்களுக்கு வழிகோலுவதாக அமைகிறது. எனவே மாணவரின் புதுமையான அல்லது வழமைக் குப் புறம்பான முயற்சிகளை ஆசிரியர் உதாசீனம் செய்யாது அவற்றிற்கு உதவி கரம் நீட்டுவதன் மூலம் ஆக்க மலர்ச்சிக்கு கரம் கொடுப்போம்.

**ஆக்கம் :- ஜெ.ஜெயகிறிஸ்ரோ**
B.Ed, BA, Dip in Teach, Dip in Eng

---



# இந்துமதம் சுட்டும் வாழ்வியல்

இந்து மதம் ஒரு வாழ்வியல் நெறி "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே" இந்த நெறியின் இலட்சியம் நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு கற்பனைக் கடந்த சோதியின் பரம்பொருள் மீது பற்று வைக்க வேண்டும். இந்து மதம் காலதேச வர்த்தமானங்களைக் கடந்த ஒரு தொன்மை உடையது. இது வாழ்வியல் ரீதியான அறிவியல் ரீதியான ஐதார்த்தமான பல உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் இது ஒரு வாழ்க்கை நெறி என சுட்டப் படுவது சாலச் சிறந்ததே.

இந்து மதம் வாழ்வியல் சிந்தனைகளை மட்டு மல்லாது நாம் சிந்தித்து செயல்படுத்தத் தேவையான அறிவியல் சிந்தனைகளையும் தன்னகத்தே கொண் டுள்ளது என்றால் அது மிகையாகாது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் எமது ஞானிகளும் யோகிகளும் அனுபவம் மூலம் கண்டறிந்த உண்மைகளை மெஞ்ஞா னம் என மக்களுக்கு அளித்தனர். இதே உண்மைகளை இன்று மேலை நாட்டு விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கின் றது. மேலைத்தேசம் அறிவியலை விஞ்ஞானத்தின் ஊடாகக் கண்டது. ஆனால் கீழைத்தேயம் அதே அறிவி யலை மெஞ்ஞானத்தின் ஊடாகக் கண்டது உண்மையே.

பிரபஞ்சத்திலே பல சமயங்கள் காணப்பட்ட போதும் வாழ்வியலோடு இணைந்த மதமாக நாம் இந்து மதத்தையே போற்றுதல் வேண்டும். ஒரு மனிதனை சரியான பாதையில் வாழ வழிகாட்டியாகவும் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவெனவாகவும் எமது இந்துசமயம் போற்றிடும் நூல்கள் அமைந்துள்ளன. இதிகாச புராணங் கள் ஒரு மனிதம் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் நெறியை எமக்கு கற்றுத் தருகின்றன.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என பகவான் அருச்சுனனுக்கு உபதேசிக்கிறார். கடமையைச் செய்வது தான் எமக்கு உரிய கடமை. அதன்பின் வருகின்ற பயன்களில் பற்று வைக்காது கடமை செய்ய வேண்டுமென இந்து மதம் போதிக்கின்றது. சமயநெறியும் அறநெறியும் இன்றுவரை ஒரே கடமைகளையே கொண் டுள்ளன. "தன்னுயிர் போல் மன்னுயிரையும் காத்தல் வேண்டும்". அதாவது பிற உயிர்களிடத்தில் அன்பு, இரக்கம், தயை, ஜீவகாருண்யம், அகிம்சை, ஆன்ம நேயம் என்கின்ற நற்பண்புகளை வளர்த்து நற்சமூகத்தை கட்டி எழுப்ப வேண்டும். இந்து மதம் எமக்கு வழிகாட்டி நிற்கின்றது.


இந்து மதம் என்ற சொல்லிற்கு பதிலாக "அன்பு மதம் என்ற பெயர் சாலவும் பொருந்தும். திருமூலர் பெருமான் "உண்ணும் போது ஒரு கைபிடி", பசுவிற்கு ஒரு வாயுறை", "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என பல வாறாக அன்பு பரிணமித்து நிற்பதைச் சுட்டிக் காட்டி யுள்ளார். நாம் நோக்குகின்ற போது அன்பு மதம் என்ற கூற்று சிறப்பானது என்பது வெளிப்படுகிறது.

சமயாசாரங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் பின்பற்றப்பட்டாலும் அவை விஞ்ஞான ரீதியாக ஆராயும் போது வாழ்க்கைக்கு அவசியமானவையாகவே காணப் படுகின்றன. வீட்டிற்கு சாண நீர், மஞ்சள் நீர் தெளிப்பதால் கிருமித்தொற்று ஏற்படாமலும் விசயந்துக்கள் வராமலும் தடுக்கின்றன. விரதமிருத்தல், தேகசுத்தி, நோயின்மை, நீண்ட ஆயுள், மனத்தூய்மை, மன அடக்கம், மன மகிழ்ச்சி என்பன ஏற்படுவதற்கு காரணமாக அமைவது இந்து மதம் போதிக்கும் வாழ்வியல் என்றால் அது மிகையாகாது.

இதனையே விவேகானந்தர் "மனிதனை மனித னாக்கும் மதம் மனிதனை மனிதனாக்கும் கல்வி, மனிதனை மனிதனாக்கும் தத்துவங்கள் மனிதனை மனிதனாக்கும் ஆன்மீகம் இவை இன்றைய உலகின் இன்றியமையாத தேவைகள்" என விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்.

எனவே ஒரு மனிதன் செம்மையான வாழ்க்கை நெறியை கட்டி எழுப்புவதற்கு உறுதுணையாக அமை வது இந்து மதமே என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெட்டத் தெளிவாக விளங்கி நிற்கின்றமை குறிப் பிடத்தக்கதாகும்.

**திருமதி.சாந்தினிதேவி ஜீவதரன்**
இந்து நாகரிக ஆசிரியர்



# மாணவர்களிடம் வளர்க்கப்பட வேண்டிய மிருது திறன்கள்

"கல்வி சமூக மாற்றத்திற்கான கருவி" ஒவ்வொரு சமூகத்தின் வளர்ச்சி மாற்றங்களின் அடிநிலை அம்சமாக கல்வி இயங்குகிறது. இன்றைய காலச்சூழலில் உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி என்ற கொள்கைகள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில் சமூகம் எதிர்பார்க்கும் வலுவான மனித மூலதனத்தை, நாட்டிற்கு உகந்த நற்பிரஜைகளை, வளமான எதிர்கால சமூகத்தைக் கட்டமைக்கும் பொறுப்பு பாடசாலைகளுக்கு உள்ளது. இவ்வகையில் இன்று மாணவர்களிடம் கட்டியெழுப்பப்பட வேண்டிய திறன்களாக மிருதுதிறன் ஆற்றல்கள் விளங்குகின்றன.

சமூகத்தைப் பிரதிபலிக்கும் நிறுவனமான பாடசாலைகள் வெறுமனே வகுப்பறைக் கற்றல், விதி முறைக் கற்றல் கற்பித்தல் மூலம் கடின திறன்களான கணிதம், விஞ்ஞானம், பௌதீகம், நிதியியல் போன்ற அறிகை சார் கற்றல் கற்பித்தல் மூலம் அறிவுத் திறன்களைக் கட்டமைத்தல் மட்டும் இன்றைய மாணவ சமூகத்திற்குப் போதுமானதல்ல. அறிவுப் பரம்பல் வேகமாக நடைபெறும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்தில் அறிவைப் பெறுவதில் இணையப் பயன்பாடு இன்று மாணவர்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளது. பாடசாலைகள் இன்று அறிவை இற்றைப்படுத்துவதில் மாணவர்களிடம் மென்திறன்களை வளர்த்தெடுப்பதிலுமே கூடிய நாட்டம் செலுத்த வேண்டியுள்ளன. மிருது திறன்கள் என்பது வாழ்நாள் கற்றல் தொடர்பான விருப்புடன், சுயவாண்மை விருத்தியுடன் தொடர்பு பட்டது. கற்றல் மூலமும் தொழிற்பயிற்சி மூலமும் கட்டியெழுப்பப்பட்டு வாழ்வில் வெற்றி அடைதலுக்கான திறனே மிருது திறன். ஒருவரின் அறிகை, சமூக வாழ்க்கை மனவெழுச்சி என்பவற்றினால் மிருதுதிறன் கோட்பாடு கட்டியெழுப்பப்படுகிறது.




தலைமைத்துவப் பண்புகளான கட்டுப்பாடு, சார்புக் கோட்பாடு, இலக்குக் கோட்பாடுகளின் செல்வாக்கைப் பெற்ற ஒரு கோட்பாடாகும். ஒருவர் ஒரு சமூகச் சூழலில் மற்றொருவருடன் கட்டியெழுப்பும் தொடர்புகள் மற்றும் நடத்தைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிக் கூறுவது மிருதுதிறன்கள். இது ஒருவரின் மனவெழுச்சி அறிவாற்றலுடன் தொடர்புடைய பண்பாகும். ஒருவரின் ஆளுமைப் பண்புகள், சமூக ஆர்வம், தொடர்பாடல், மொழி, பழக்கவழக்கம், நட்புரிமையுடன் குறிக்கோளை அடையத் துணைநிற்றல், மனக் கட்டுப்பாடு, சுய ஆக்கத்திறன் ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை உள்ளடக்கியது எனலாம். ஒருவரின் தொழில் அறநெறி, மனப்பாங்கு, தொடர்பாடல், மனவெழுச்சி அறிவாற்றல் மற்றும் அவரது பொறுமை, தன்னம்பிக்கை, குழுமனப்பாங்கு முதலிய தனித்த பண்புகளைச் சுட்டிக் காட்டுவதாகும்.

கடின திறன்கள் ஒருவரின் நுண்ணறிவுடன் தொடர்புடையன. அதாவது இடது மூளையின் செயற்பாட்டுடன் தொடர்புடையன. மிருது திறன்கள் மனவெழுச்சி அறிவாற் றலுடன் அதாவது வலது மூளை செயற்பாட்டுடன் தொடர்புடையன. கடின திறன்கள் நிலையான விதிகளுடன் எழுத்தில் எழுதப்பட்டுப் பின்பற்ற வேண்டிய விதிகளைக் குறித்து நிற்கிறது. மிருது திறன்கள் ஒரு நிறுவனத்தில் குழுவாக இயங்குமிடத்து அங்கு பின்பற்றப்படும் கலாசாரம் பணியாளர் தன்மைகளுக்கேற்ப மாறும் தன்மையுடையன. கடின திறன்கள் பாடத் திட்டங்கள், பாடநூல்கள், கற்கை நெறிகள் மூலம் கற்கப்படுவன. ஆனால் மிருது திறன்கள் பெரும்பாலும் வகுப்பறைக்கு வெளியே பாடசாலைச் சூழல், சமூகச் சூழல், விழாக்கள், நிகழ்ச் சித் திட்டங்கள், இடைவினைத் தொடர்புகள், பரஸ்பர தொடர்பாடல், குழுச் செயற்பாடுகள், மன்றச் செயற்பாடு கள், செயற்பாட்டுக் கற்கைகள் மூலமும் முயன்று தவறுதல் மூலமும் கற்றுக் கொள்ளப்படுகின்றன.

பாடசாலைகள் மாணவர்களிடையே மிருது திறன்களை மேம்படுத்தும் நோக்கில் கற்றல் கற்பித்தலை வடிவமைக்க வேண்டிய தேவையுள்ளது. கற்றலுக்கு உவப்பான சூழலை ஒழுங்கமைத்தல், மாணவர் தமக்கேற்ற பாணியில் கற்க இடமளித்தல், கற்றல் உயர்ந்த இலக்குடையதாக அமையத் துணைபுரிதல், முன் மாதிரிச் செயற்பாடுகள், போலச் செய்தல், சிறந்த தொடர்

பாடல் மாணவர்களின் தனித்துவ கற்றலுக்கு ஆசிரியர் முன்மாதிரியாக திகழ்தல், பல்லூடகக் கற்றலைவிரிவு படுத்துதல் இணைய வழிக்கற்றலை மேம்படுத்துதல் அவையாக இயங்க வழிப்படுத்தல், இணைப்பாட விதான கலைத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்தல், புதிய நுட்பங்கள் கையாண்டு திறன் வெளிப்பட உதவுதல்.

பிரச்சினைகளை இனங்காணவும் அவற்றை அணுகி நேர்மனப்பாங்குடன் இயங்கவும் நெறிப்படுத்தல் என்ற உபாயங்கள் கையாண்டு மாணவர்களின் மன வெழுச்சி சமநிலையை வளர்த்தெடுத்தல் மனவெழுச்சிக் கட்டுப்பாட்டுப் பயிற்சிகள் ஆக்கத்திறன் செயற்பாடுகளுக்கு வாய்ப்புக்கள் வழங்குதல் மூலமும் மிருது திறன்கள் கட்டியெழுப்பப்பட நடவடிக்கை எடுக்கலாம்.

மிருதுதிறன்கள் மூலம் மெருகூட்டப்படும் மனித மூலதனமே எதிர்கால சமூகத்தை, தேசத்தை வளம் மிக்கதாக கட்டியெழுப்பத் துணை புரியும். அதுவே இன்றைய உலகத்தின் எதிர்பார்ப்பும் ஆகையால் பாடசாலைகள் மாற்றங்களுக்கு முகங்கொடுத்து வினைத்திறன் மிக்க வகையில் மிருது திறன் ஆற்றங்களை நிலையூன்றச் செய்ய வேண்டும். மாற்றத்தின் முகவர்களான ஆசிரியர்கள் தமது அறிவு, திறன், மனப்பாங்குளால் தொடர் கற்றலால் மாணவர்களுடன் இடைவினையாற்றி முன்மாதிரிச் செயற்பாடுகளால் மென்திறன்கள் நிரம்பிய வளமான மனித சமூகத்தை உருவாக்கப் பாடுபட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றால் மிகையாகாது.

திருமதி.உ.பிரணவநாதன்
ஆசிரியர்

# தமிழே உன்னை மொழி பெயர்க்கிறேன்

மொழிகளே இணைப்பு
மொழிகளே பிணைப்பு
மொழிகிறேன்
எந்தன் இதயத்தின்
மொழி பெயர்ப்பினை!

மொழி பெயர்ப்புக்கள்
ஏராளம்
என்னிடம்,
மொழி பெயர்க்கிறேன் ,
உந்தன் மௌனங்களை
உவமானங்கள் ஏதுமின்றி,

புரியட்டும்
உன்னை நேசிக்கும்
உன்னை வாசிக்கும்
பலருக்கும்
உந்தன் மௌனத்தின்
கருத்தாளம்!

அடடா!
முத்தமிழும் முரண்படுகிறது
உந்தன் மூச்சுக்காற்றினை
முத்தமிட்டு
மொழி பெயர்த்திடவே!

எத்தனை அர்த்தங்கள்
அங்கு
எத்தனிக்கிறேன்
அத்தனையும்
அறிந்திடவே

அர்த்தங்கள் அறிந்தும்
பரிந்துரைக்கின்றேன்
உனக்கான தனியொரு
அகராதி வேண்டுமென்று!


வே.திஷோபிகா
A/L (2021)

# போதைப்பொருள் ஒழிப்பு



தேசிய ரீதியாக போதைப் பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலையில் கருத்தரங்கு, பதாதைகளைக் காட்சிப்படுத்தல், பொதுமக்களுக்கு விழிப்பூட்டலை மேற்கொள்ளல் எனப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.




வலயமட்ட கணிதபாட கையேடு தயாரிப்பில் எமது பாடசாலையில் இருந்து பங்குபற்றிய திரு. குமாரதாசன் ஆசிரியர் அவர்கள் கௌரவிக்கப்பட்ட வேளையில்....

## வீதிப் போக்குவரத்துக் கடமை

வீதிக்கடமையில் ஈடுபடுவதற்கான பயிற்சி காவல் துறையினரால் வழங்கப்பட்டு பணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவ அணியினர்.




# நவராத்திரி கலை விழா

நவராத்திரியானது அம்பிகையின் விரதங்களில் ஒன்றாகும் இந்த நவராத்திரி விழா பாடசாலைகளிலும் நடாத்தப்படுகின்றது. நவராத்திரி விழாவின் இறுதி நாளாகிய விஜயதசமி விழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் எமது பாடசாலையில் 07-10-2019 அன்று திங்கட்கிழமை ஒன்பது மணியளவில் பாடசாலை முன்றலில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. இவ் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ரமணராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக சித்தங்கேணி அருள்மிகு சித்தி விநாயக ஆலய மதுசூதனக்குருக்கள் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து இறை வணக்கம் நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம் பெற்றது. பின் விருந்தினரை வரவேற்கும் முகமாக வரவேற்புரை பாடசாலை சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி.ஜீவிதா அவர்களினால் இடம்பெற்றது. பின் தலைமையுரையினை எமது பாடசாலையின் இந்து நாகரிக ஆசிரியர் திருமதி. சாந்தினிதேவி ஜீவதரன் அம்மையினால் நிகழ்த்தப்பட்டது.

பின் கலைவிழாக்கள் ஆரம்பமாகின. தரம் 02 மாணவியினால் தனி நடனம் வழங்கப்பட்டது. பின் சித்தங்கேணி அருள்மிகு சித்தி விநாயக ஆலய குருக்கள் அவர்களினால் ஆசியுரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தரம் 08, 09 மாணவர்களினால் வேப்பிலை நடனம் நிகழ்த்தப்பட்டது. பின் தரம் 02 மாணவன் செல்வன் வினோத் அவர்களினால் பேச்சு நிகழ்த்தப்பட்டது. அத்தோடு தரம் 10 மாணவி செல்வி.கம்சிகா அவர்களினால் பாடல் இசைக்கப்பட்டது. பின் எமது பாடசாலை அதிபர் அவர்கள் உரையாற்றினார். பின் மாணவர்களினால் சிறு நாடகம் மேடையேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயர்தர மாணவிகளினால் (12, 13) சிவனின் தாண்டவ நடனம் நிகழ்த்தப்பட்டது. பின் பிரதம விருந்தினாக கலந்து சிறப்பித்த யாழ் பல்கலைகழக இந்து நாகரிக சிரேஷ்ட விரிவுரையாளர் அவர்கள் நவராத்திரியை மையப்பகுதியும் நிகழ்வுகளைக் குறித்தும் சிறப்பான வகையில் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து தரம் 3 மாணவியினால் பாம்பு நடனம் இடம்பெற்றது. பின் தரம் 13 உயர்தர மாணவிகள் மற்றும் தரம் 10 மாணவர்கள் பங்கு பற்றிய எமது பாடசாலை ஆசிரியராக பணிபுரியும் திரு.பாபுதரன் அவர்கள் நடுவராக கலந்து சிறப்பித்த பட்டிமன்றம் இடம் பெற்றது. இப் பட்டிமன்றமானது தமிழ் பண்பாட்டை மக்கள் நழுவுகின்றனரா? அல்லது தழுவுகின்றனரா? என்பதை மையமாகக் கொண்டு இடம் பெற்றது. இப் பட்டிமன்றத்தில் பல விடயங்கள் பற்றி பேசப்பட்டன. மிகவும் நகைச்சுவையாகவும் நடை








பெற்றது. பின் பாடசாலையின் மாணவத் தலைவி செல்வி.பிரியங்கா அவர்களினால் நன்றியுரை இடம் பெற்றது. இவ் நிகழ்வானது பி.ப 2.30 மணியளவில் பாடசாலை கீதத்துடன் இனிதே நிறைவு பெற்றது. இவ் நவராத்திரி விழாவில் நடைபெற்ற கலைநிகழ்வு களில் எனக்கு மிகவும் பிடித்த நிகழ்வாக உயர்தர மாணவிகளினால் நிகழ்த்தப்பட்ட சிவனின் தாண்டவ நடனத்தையும் பட்டி மன்றத்தையும் குறிப்பிடலாம்.

இ.தமிழ்நிலா
A/L (2021) - கலை

சுற்றாடல் பாதுகாப்புக்குழு



# பாடசாலை அபிவிருத்தியும்
# பாடசாலை முகாமைத்துவமும்




பாடசாலை யின் அபிவி ருத்தி என் பது ஒரு நீண்டகால செயற்பாடு ஆகும். ஒரு பாடசாலை யின் அபிவி ருத்தி என் பது குறித்த நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அதனை வினைத்திறன் மிக்க முறையில் செயற்படுத்தி அதன் ஊடாக மிகச் சிறந்த வெளியீடு களை தொடர்ச்சியான முறையில் பெற்றுக் கொள்வ தனை குறிக்கும். குறைந்த உள்ளீடுகளில் இருந்து அதிஉயர் வெளியீடுகளினைப் பெற்றுக் கொள் வதனைக் குறிக்கும். இதற்கு மிகச் சிறந்த திட்டமிடல் அவசியம் ஆகும். எனவே பாடசாலையினால் தயாரிக் கப்படும் ஐந்தாண்டு திட்டமிடல் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு வினைத்திறன் மிக்க முறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும். பாடசாலையை பொறுத்தவரையில் அதன் அபிவிருத்திக் குறிகாட்டி களாக மாணவர்களது கல்வி ரீதியான அடைவு மட்டங் களில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தினா லும் அது தொடர்பான தார்மீக பொறுப்பு பாடசாலையை சாரும். வினைத்திறன் மிக்க பாடசாலை முகாமைத்து வத்தினால் மிகச் சிறந்த மாணவர் வெளியீட்டினை மேற்கொள்ள முடியும்.

பாடசாலையின் வளங்களை அதாவது பௌதீக, மனித வளங்களை நிறுவனத்தில் இலக்கு/ நோக் கினை அடையக் கூடிய வகையில் பயன்படுத்தி வினை த்திறன் மிக்க வகையில் விரயங்கள் இழப்பீடுகளை தவிர்த்து மாணவர்களின் கற்றல் இலக்கினை அடைய வைப்பதன் மூலம் மிக வலுவான கல்வி வெளியீடு களினை அல்லது அடைவு மட்டங்களை அடைய முடி யும். இதில் பாடசாலையின் செயற்பாடுகளை முகாமை செய்பவருக்கு பிரதான பங்கு உண்டு. பாடசாலையின் பௌதீக வளங்கள் என்பது நிலம், கட்டடங்கள், ஆய்வு கூடங்கள், இலத்திரனியல், திறன் வகுப்பறைகள், நூலகங்கள், கணினி கூடங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டு இடங்களினை குறிக்கின்றது. மனித வள முகாமை என்பது பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய ஊழியர்களை பயன்படுத்தி பாடசாலையின் இலக்கினை அடைவதற்கு பயன் படுத்துவதனை குறிக்கின்றது. இதன்போது சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் ஊழியர்கள் தொடர்பி லான சட்டங்கள் அவர்கள் தொடர்பான உரிமைகளை கருத்தில் கொண்டு செயற்படுவதன் மூலம் மனிதவள முகாமையினை மேற்கொள்ள முடியும்.

பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் அமைப்புக்கள் என்பன காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின் றன. பாடசாலை அபிவிருத்தி கணக்கு நிதி, தர உள் ளீட்டுநிதி மற்றும் ஏனைய நிதி ஏற்பாடுகளை நிதிப் பிரமாண முறைகளுக்கு அமைவாகப் பயன்படுத்து வதன் மூலமும் மாணவரின் தேவைகளை முன் னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்ய முடியும். இவ்வா றான நடவடிக்கைகள் மாணவரின் கற்றல் நடவடிக்கை யினை ஊக்குவிக்கும்.

பாடசாலையின் அபிவிருத்திக்கு தொடர்பாடல் திறன் இன்றியமையாத ஒன்றாகும். பாடசாலையினை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு பாட சாலை மட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி சாரா ஊழியர்களிடம் இருந்து ஒத்துழைப்பினை பெற வும் சமூக மட்டத்தில் இருந்து நன்கொடை மற்றும் ஏனைய வசதிகளை பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்க வும், அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையினை பெறுவதற்கும் சமூகமான உற வினை பேணவும் தொடர்பாடல் திறன் அவசியம் ஆகி ன்றது.

எனவே சிறந்த முகாமைத்துவம் மூலம் பாட சாலையினை நீண்ட காலத்தில் அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்ல முடியும்.

**க.யதீஸ்**
ஆசிரியர்

## பிரிவுபசார விழா

எமது பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமை யாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு . இ பரணீதரன் திரு.ஜனோஜ் ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழாவில்....





# எமது பாடசாலையில் உள்ள



# மரங்கள்

எமது பாடசாலையின் அடையாளமாக மரங்கள் உள்ளன. மழைக்கும், வெயிலுக்கும் நல்ல குடையாகத் திகழ்கின்றன. பாடசாலையில் உள்ள மரங்களில் பெரும்மரங்களாக ஆலமரம், வேம்பு, தேக்கு, நாவல், புளி, மா, நெல்லி, வாகை, விளா முதலியவையும் சிறுமரங்களாக தென்னை, பனை, மரமுந்திரிகை, ப(F)ாம், வாழை, கமுகு முதலானவை காணப்படுகின்றன.

இம் மரங்கள் மாணவர்கள் ஒரு ஆரோக்கியமான இயற்கைச் சூழலில் கல்வி கற்பதற்கும், விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கும் நிழலாகவும் நன்மை பயக்கின்றன. வெப்பம் அதிகரிக்கும் வெயில் காலங்களில் இம் மரநிழல்கள் குடையாகின்றன. நாம் சுத்தமான இயற்கைக் காற்றினை சுவாசிக்க உதவுகின்றன. மழை வீழ்ச்சி அதிகரிக்க துணை புரிகின்றன.

இம் மரங்கள், பழங்கள், மலர்கள், நிழல், குளிர்ச்சி என ஆரோக்கியமானவற்றைத் தருகின்றன. காற்றைச் சுத்தப்படுத்துகின்றன. மலர்கள் மலர்ந்து மனதிற்கு மகிழ்ச்சியை தருகின்றன. காய்ந்த சருகு, இலைகள் மண்ணுக்கு உரமாகின்றன. இப்படி எண்ணிறைந்த மரங்களை பெரும்பாலான பாடசாலைகளில் காணமுடியாது. மரங்களைத் தாங்கும் வேர்கள் மனிதர்களின் வேர்களாகின்றன எனில் மிகையாகாது. ஒவ்வொரு மரமும் இறைவன் தந்த அருள் கொடை அதனைப் பாதுகாப்போம் பயன்பல பெறுவோம்.

இ.டனோஜனா- A/L (2020)

## விஞ்ஞானக் கண்காட்சி

யாழ். மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞானக் கண்காட்சியில் எமது மாணவர்களும் எமது திறன்களை வெளிபடுத்தும் வண்ணம் பங்குபற்றினர். நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களும் வழிப்படுத்திய ஆசிரியர் ஜெ.ஜெயகிறிஸ்ரோ கௌரவிக்கப்பட்டனர்.

## தமிழ் மொழித்தினம்

2019ம் ஆண்டு தமிழ்மொழித்தினப் போட்டியில் எமது பாடசாலையின் விவாத அணியினரும் தமிழறிவு வினாவிடை போட்டியில் பங்குப்பற்றிய அணியினரும் வலயமட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்று தமது திறமையை வெளிப்படுத்தினர்.

## சமூக விஞ்ஞானப் போட்டி

வலயமட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் பங்குப்பற்றி வெற்றியீட்டியோர் விபரம் :

எ.ஜெறோமினி (3ஆம் இடம்) தரம் 06

க.லோஜினி (3ஆம் இடம்) தரம் 08

இ.றவீனா (1ஆம் இடம்) தரம் 13

இம்மாணவிகள் மாகாணமட்டப் போட்டியிலும் பங்குபற்றினர்.



## புரிந்திடு

ஒருவேளை ...
இனிப்போதும் இனி என
தீர்க்கமாய் திடமாய் நீ
தனித்திட்டாலும்
உன்வாழ்வில்
உறுதியாய் நீ நின்றாலும்
ஆய்க்கினையாய் அறிவுரைகள்
அட்டகாசமாய் பலர் தருவர்
சகித்திடு.

வாழ்க்கைத் துணையவன்
வல்வினைகள் செய்திடினும்
வருங்காலம் இனிதென
வாழ்நாளை நகர்த்திடு

பிள்ளைக்காய் பெற்றோர்க்காய்
ஊருக்காய் உலகிற்காய்
வாழ்ந்து நீ
வயோதிபம் அடைந்திடு

வாசலில் வாகனம் நின்றாலும்
தொலைபேசியில் நீ கதைத்தாலும்
தொல்லைகள் மறந்து
நீ சிரித்தாலும்
பக்கத்திருப்பார் பார்வையில்
பலகோணங்கள் பார்ப்பாய் நீ
தோற்றவள் தொலைத்தவள் என
நாமங்கள் பல சூட்டினாலும்
ஊமையாய் இருந்திடு
உண்மைகள் புரிந்திடு
இங்கே
வெற்றி கண்ட தோல்விகளும்
தோல்வி கண்ட வெற்றிகளும்
வானத்து விண்மீனாய்
விரிந்து கிடக்கையில்

அச்சம் தவிர்
வாழ்வின் மகிழ்வை
இயற்கையின் அழகை
இன்பமாய் நுகர்ந்திடு
உலகு உனக்கானது
வாழ்வு வாழ்வதற்கே!

கவிதாயினி
ஆசிரியை

# நல்லவர் அறிவுரை

*********

வீட்டின் அறையில் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதனைச் சுற்றி விட்டில் பூச்சியானது வட்டமடித்துப் பறந்து கொண்டிருந்தது. விளக்கானது பூச்சியைப் பார்த்து "பூச்சியே! நீ என்னையே வட்டமடித்துக் கொண்டிருக்கிறாய்! நானோ பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறேன். நீ என் மீது தவறுதலாக விழுவாயானால் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இறந்து விடுவாய். எனவே நீ என்னைச் சுற்றி வட்டமடிக்காதே" என்று அறிவுரை கூறியது. அதனைப் பூச்சி ஏற்றுக் கொள்ளவில்லை. அது மீண்டும் விளக்கை சுற்றிப் பறந்து கொண்டிருந்தது.

விளக்கு, பூச்சியின் செயலைப் பார்த்து கவலையோடு எரிந்து கொண்டிருந்தது. பூச்சி வேகமாக பறந்தது. திடீரென விளக்கின் சுடரின் மீது விழுந்தது பூச்சி. விளக்கோ தனது திரியை உள்ளே இழுத்துக் கொண்டு தன்னை அணைத்துக் கொண்டது. விளக்கு அணைந்ததால் அறையில் வெளிச்சம் இல்லாமல் இருள்தென்பட்டது. இருளில் அந்தப்பூச்சிக்கு எந்த இடத்தில் பறந்து செல்வதெனத் தெரியவில்லை. அது பறந்து சென்ற வேகத்தில் ஏதோ ஒன்றில் சிக்கிக் கொண்டதைப் போன்று உணர்ந்தது. சிறிது நேரத்தில் அறையின் உள்ளே வீட்டுக்காரர் நுழைந்தார். அணைந்திருந்த விளக்குத்திரியை மேல் இழுத்துவிட்டு விளக்கை ஏற்றினார். வெளிச்சத்தில் அந்தப் பூச்சியானது தான் சிக்கியிருந்த இடத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டது. "நான் இருட்டில் இடம் தெரியாமல் இந்த சிலந்தி வலையில் மாட்டிக் கொண்டேனே" என்று மனம் வருந்தியது பூச்சி. அதே நேரத்தில் பூச்சியை நெருங்கி வந்தது சிலந்தி. "சிலந்தியே! என்னை விட்டு விடு!" என்று கெஞ்சிக் கேட்டது பூச்சி.

பூச்சியை பார்க்கிறபோது சிலந்திக்கு அனுதாபம் ஏற்பட்டது. அது பூச்சியை நோக்கி "பூச்சியே! உனது நன்மைக்காக அந்த விளக்கு கூறிய அறிவுரையை நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். மேலும் நீர் உயிர் விடக்கூடாது என்ற எண்ணத்தில் அது தன்னையே அணைத்துக் கொண்டது. எனவே இப்போது நான் உன்னைப் பிடித்தால் அந்த விளக்கின் தியாகத்திற்கு அர்த்தம் இல்லாது போய்விடும். ஆகையால் உன்னை எனது வலையிலிருந்து விடுவிக்கின்றேன். இனியேனும் நீ "நல்லவர்களின் அறிவுரையை ஏற்று அதன்படி நடக்க வேண்டும்" என்றது.

தே.தேவரஜனா
தரம் 10A

# அப்பா...



கண்களிலே கோபத்தையும்
இதயத்திலே பாசத்தையும்
வைத்து
நமக்காக வாழும் ஓர்
உறவு தந்தை...
தான் கண்ட சோகங்கள்
அவமானங்களை விடுத்து
நீங்கள் அதை நேரிடக்கூடாது
என்று ஏங்கும் ஓர் உறவு
தந்தை ...

ஜே.மேரியூலினா
தரம் 10A

# We must do these

You must tell truth
To become a great man
You must help others
Without expecting rewards

You must be clean
To prevent disease
You must do hard work
To become a successful person.


You must read books
To become a full man
If you do these
You will become a great man.

**Mrs.M.Kumaravel**
**Teacher**



அகில இலங்கை ரீதியான சைவ பரிபாலன சபைப் பரீட்சையில் 2019 உயர்தரப் பிரிவு மாணவி செல்வி.தேவராஜா சுஜித்தா இந்து நாகரிக பாடத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

# ஜீவநதி





க.பரணீதரன் அவர்களை இதழின் ஆசிரியராகக் கொண்ட ஜீவநதி மாதம் தோறும் வெளிவருகின்ற கலை இலக்கிய சஞ்சிகை ஆகும். 132ஆவது இதழில் பல கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், பத்தி, நேர்காணல், நூல் விமர்சனம் போன்ற பலவற்றை உள்ளடக்கி உள்ளன. அந்த வகையில் இவ் இதழில் உள்ள சிறந்த கட்டுரையாக சி.ரமேஷ் என்பவரால் எழுதப்பட்ட நவீன நாடக உருவாக்கத்தில் இரு துயரங்கள் என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கட்டுரை எளிதில் விளங்கக் கூடியது. 12 தர தமிழ்ப்பாட மாணவர்களின் பாடத்திட் டத்திலும் இந் நாடகம் உள்ளடக்கப் பட்டுள்ளது. மேலும் இவ் இதழில் தொடரிப் பண்பாடு என்ற தமிழ்ச் சூழலில் தொலைக்காட்சித் தொடரிகள் என்ற கட்டுரை பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களால் சிறப்பாக எழுதப் பட்டுள்ளது.

மேலும் இவ் நூலில் த.கலாமணி என்பவரால் எழுதப்பட்ட கணக்கு வாத்தியார் என்ற கவிதை இடம் பெற்றுள்ளமை சிறப்பு வாய்ந்தது. மேலும் த.அஜந்த குமாரின் உவமானம் தேடுதல் என்ற கவிதையும் இடம் பெறுகின்றது. அகிலா என்பவருடைய நேர்காணலும், க.சட்டநாதன் என்பவரால் எழுதப்பட்ட இருமுகம் என்ற சிறுகதையும் இடம்பெறுவதும் சிறப்பு வாய்ந்தனவாகும்.

இவ்வாறாக ஜீவநதி என்ற சஞ்சிகையில் பல சிறப்புக்கள் இடம் பெறுகின்றன. இந்நூலின் ஆசிரியர் தனது ஆசிரியர் குறிப்புரையில் எதிர் காலத்தில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் ஈழத்து எழுத்தாளர் நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற பல கருத்துக்களையும் முன்வைத்துள்ளமையைக் காணலாம்.

செ.பவித்ரலா
A/L (2020)

**CELL PHONE**



I Finally realized it
People are prisoners
Of their phones
That's why they are
Called cell phones!

K.Kajani A/L (2021)

# கலைமுகம்




கலைமுகம் திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்படும் கலை இலக்கிய சமூக சஞ்சிகையாகும். இதன் 68 வது இதழ் ஏப்ரல் தொடக்கம் செப்ரெம்பர் 2019ம் ஆண்டிற்கானதை உள்ளடக்கியதாகும். இதன் உள்ளே பல உள்ளடங்கங்கள் உள்ளன. அதாவது கட்டுரைகளாக தியாகராஜ பிரவாந், நா.நவராஜ், டிசே தமிழன், ச.அல்பேட் நீகன், சப்னா இக்பால், ச.இராகவன், வே.ஹேகுலரமணம், அ.அஜந்தர் என்பவர்களும் மொழி பெயர்ப்புக் கட்டுரைகளை டெஸ்மொன்ட் மல்லிகாராச்சி (தமிழில் க.சண்முகலிங்கம்) அவர்களும் அரங்கா விஜயராஜ், தட்சாயினி, நூறா, எம்.ரிஷான் ஷெரிப், இயல்வாணன், த.அஜந்தகுமார், கை.சரவணன், பத்ம பிரஷன், சித்தாந்தன், தர்மினி, சித்தி றபீக்கா பாயிஸ், மு.யாழவன் போன்றோர்கள் தமது உணர்வுகளினூடாக கவிதைகளையும் நேர்காணல் க.தணிகாசலம், நேர்கண்டவர் இயல்வாணன் என்பவற்றையும் S.K.விக்னேஸ்வரம், தபின், நிஜன் போன்றோர் பத்திகளையும் எமக்கு தந்ததோடு ச.இராகவன், சி.ரமேஷ், சாங்கிருத்தியன் போன்றோர் இவ் நூல் மதிப்பீடுகளை செய்துள்ளனர். இந்நூலில் இடம்பெறும் அதாவது ஆறுதல் என்னும் சிறுகதை மிகச் சிறப்பாக இடத்தைப் பெறுகின்றது. இது க.சட்டநாதன் என்பவரால் எழுதப்பட்டதாகும். இச் சிறுகதையில் எமது மாணவர்கள் ஏங்கும் அரவணைப்பு உரிய நேரத்தில் கிடைக்க வேண்டும். இதில் கதாநாயகனான கௌசியின் பாடசாலை நினைவுகளில் பாலசுப்பிரமணிய பகுதித் தலைவர் அடித்து காயப் படுத்தியபின் அவனது மாமனான நாதன் அவனை அணைத்துக் கொண்டு சென்றதனூடாக அவனுக்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டது. மாணவர்களாகிய எமக்கு தேவைப்படும் ஆறுதலை எம் மூத்தவர் எமக்கு வழங்க வேண்டும் என்பதாகும். இக் கலை இலக்கிய சமூக இதழ் மேலும் புதிய தகவல்களுடன் வெளிவரும் என நம்புகிறேன்.

சி.சிறிகெஜலா
A/L (2020)

| | |
|---|---|
| Wife | :- What are you doing? |
| Husband | :- I'm killing mosquitoes |
| Wife | :- How many did you kill? |
| Husband | :- Total 5, 2 females, 3 males |
| Wife | :- How do you know their genders? |
| Husband | :- 2 near mirror and 3 near beer. |

JOKE

U.Jarushana
2021 -Arts

# கண்டி இராச்சியத்தில்

## எஹலப்பொல அதிகாரத்தின் பாத்திரம்

இலங்கை வரலாற்றில் இறுதி சுதந்திர இராச தானியான கண்டி அரசு தனது 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சுதந்திரம் இறைமையினை 1815இல் ஆங்கிலேயர்களிடம் இழந்தமை முக்கிய திருப்பு முனையாக வரலாற்றாசிரியர்களினால் கருதப்படுகின் றது. பல்வேறு உள்வாரியான மற்றும் வெளிவாரியான காரணிகள் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியுள்ள தனைக் காணலாம். இவ் வகையில் பிரதானிகள் எனும் அதிகாரிகளுக்கும் மன்னருக்கும் இடையிலான உட்பூசல்கள் இறுதிக் காலத்தில் தீவிரமடைந்து இருந்தன. இத்தகைய பின்னணியில் எஹலப்பொல எனும் பிரதானியின் பங்கு கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியில் வகிக்கும் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

### எஹலப் பொலவின் பிறப்பு

1773 இல் இன்றைய மாத்தளை மாவட்டத்தில் ரட்டேரால் (Radala) எனும் பிரதானி குடும்பத்தில் எஹலப் பொல பிறந்தான். யட்டா வத்த மகாதேரரிடம் கல்வி பயின்றான். எஹலப்பொல மத்திய மலை நாட்டுப் பிரபுக்கள் மத்தியில் பிரபலமானதும் பாரம்பரிய பெருமை மிக்கதுமான குடும்பத்தின் வழி வந்தவனாவான். முன்னால் முதல் மந்திரியும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங் கனை அரசனாக்கியவருமான பிலிமத்தலாவையின் (Pilimatalawe) மருமகனுமாக விளங்கியமை குறிப்பி டத்தக்கதாகும்.


மலை நாட்டின் மற்றொரு பெருமை மிக்க பிரபுக் கள் குடும்பத்தினைச் சேர்ந்த குமாரி ஹாமியை திருமணம் செய்தான். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தையும், ஒரு பெண் மகளும் பிறந்தனர். இக் குழந்தைகளுள் இளைய மகன் மத்துகம பண்டார சிறந்த வீரனாக இந்நாட்டு வரலாற்றில் இடம்பிடித்துள் ளான். குமாரி ஹாமியின் சகோதரனான கெப்பட்டி பொல நிலகம இன்னொரு சிறந்த வீரனாக வரலாற்றில் இடம் பிடித்துள்ளமை இன்னோர் சிறப்பு ஆகும். எஹலப் பொல பினிவிட்டகார நிலமேயாக முதலில் நியமிக்கப்பட்டான். பின்னர் மீகாஸ் தன்னேயின் இறப்பினைத் தொடர்ந்து (Megastenne) 1809 இல் சப்பிரகமுவ திஸாவையாக ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனால் நியமிக்கப்பட்டான்.

### எஹலப் பொலவின் கலகம்

கண்டி இராச்சியத்தினை வெற்றி கொள்ளும் ஆங்கிலேயரின் திட்டத்திற்கு பெரிதும் பங்களித்தவர் ஆள்பதி தோமஸ் மெயிற்லண்ட் (Thumas maland) (1805 - 1811), மெயிற்லண்ட சுகவீனமுற்றுப் போன பின்பு கடமையாற்றிய பதிலாள்பதி வில்சன் (Wilson) ஆள்பதி ரொபேர்ட் பிரௌன்றிக் (Robert Brownring) (1812 - 1820) மற்றும் சிங்கள மொழியினைக் கற்று நன்கு தேர்ச்சி பெற்றிருந்த ஜோன் டொய்லி (John De oyly) என்போர் ஆவர்.

ஜோன் டொய்லியுடன் தொடர்புகளினை எஹலப் பொல எக்னெலி கொட, புஸ்வல்லை போன்ற தலைவர் கள் பேணி வந்தனர். இவ்வதிகாரிகளின் நம்பிக்கைத் துரோகச் செயலினால் பெரிதும் மனமுடைந்த நிலையில் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் விளங்கினான். இறுதிக் காலப்பகுதியில் மன்னன் கொடுமை வாய்ந்தவனாகி விட்டான். அதற்குக் காரணம் மதுபானத்திற்கு அடிமையாகியது ஆகும். கொழும்பில் இருந்து பிரண்டி அனுப்பி வைக்கப்பட்டதாக பதிவுகள் காணப்படுகின் றன. மல்வத்தை விகாரையில் குளிப்பதற்காக பாவிக்கப் பட்ட கிணற்றை அப்புறப்படுத்த வேண்டிய தேவை ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு ஏற்பட்டது. (கண்டி வாவியினை நிர்மாணிப்பதற்காக இருக்கலாம்.)

குளங்கள் விவசாயத்திற்காக அன்றி நகர அலங் காரங்களுக்காக பாவிக்கப்படுவதில்லை என எஹலப் பொல கூறினான். கண்டி அரசனுக்கு வாரிசுகள் இல்லாத நிலையில் இரு அரச கன்னியர் மதுரையில் இருந்து வரவழைக்கப்பட்டு மன்னன் அவ் அரச கன்னியர்களினை மணம் புரிந்து கொண்டான். 1814 இல் அரசனின் இரண்டா வது திருமணத்தின் போது எஹலப்பொல அரசனின் பாதத்தில் வைத்து பணிந்த வெகுமதிகள் பெறுமதிகள் குறைந்தன என அரசன் இகழ்ந்து தள்ளி விட்டான். அன்று தொட்டு இருவருக்



குமிடையே வெளியரங்கமான பகை மூண்டது. இதனை அடுத்து எஹலப்பொல சப்பிரகமுவ மாகாணத்தில் குடி மக்களுக்கு துன்பம் விளைவிப்பதாக முறையீடுகள் அரசனுக்குக் கிடைக்கப் பெற்றன.

அரசன் கண்டிக்கு வருகை தருமாறு எஹலப் பொலவிற்கு கட்டளை பிறப்பித்தான். அவன் கண்டி செல்ல மறுத்ததுடன் அரசனுக்கு விரோதமாகச் செயற் பட தலைப்பட்டான். அங்கு திரட்டிய அரசிறையைச் செலுத்தாது விட்டான். ஆங்கிலேயருக்கு வெகுமதி களினை அனுப்பி அவர்களுடன் தொடர்புகளினைப் பேணினான். ஆங்கிலேயரிடம் தூது அனுப்பியதனை அறிந்த மன்னன் அவனது சப்பிரகமுவ பொறுப்பு வாய்ந்த பதவியினைப் பறித்து மொல்லிக் கொடவிடம் வழங்கினான். 1814.04.27ம் திகதி சப்பிரகமுவவில் பட்டுக் கெதறவில் மன்னனுக்கு எதிராக கிளர்ச்சியினை எஹலப்பொல ஆரம்பித்தான். அத்துடன் ஏனைய திசாவைகளையும் கலகம் செய்யுமாறு தூண்டினான்.

## எஹலப்பொல ஆங்கிலேயர் பக்கம் சார்தல்

எஹலப் பொலவுடன் 1000 பேருக்கும் குறை வானவர்களே கிளர்ச்சியில் பங்குபற்றினர். எஹலப் பொல, எக்னொலிக் கொட கூட்டணி கிளர்ச்சி அணியி னர் நாயக்கர் ஆட்சியினை ஒழித்து சிங்கள அரசினை உருவாக்கப் போவதாக புறப்பட்ட இவர்களுக்கு வேறு பலரும் இணைவர் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது. மேலும் பிரித்தானிய ஆளுநர் ரொபேர்ட் பிரௌன்றிக் படை உதவி வழங்குவார் என்ற நம்பிக்கையும் எஹலப் பொலவிற்குக் காணப்பட்டது. எனினும் ஆள்பதி சிறு படையணியினை கண்டி இராசதானியின் எல்லையில் நிறுத்தி வைத்திருந்தமை கண்டு எஹலப்பொல ஏமாற்றம் அடைந்தான்.

முதலமைச்சர் மொல்லிக்கொட மூலம் கிளர்ச்சி பற்றி அறிந்து கொண்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கிளர்ச்சியினை அடக்குமாறும் எஹலப்பொலவினை கைது செய்து வருமாறும் பணிப்புரை வழங்கினான். கண்டியில் இருந்து புறப்பட மொல்லிக்கொட தலைமை யிலான படையணி ருவான் வெல்லவை அடைந்தது. ருவான் வெல்லையினை உள்ளடக்கிய மூன்று கோரளையின் அதிகாரியாக நியமிக்கப்பட்டவன் மொல்லிக்கொடவின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக் கதாகும். மொல்லிக் கொடவுடன் சப்பிரகமுவ நோக்கி புறப்பட்ட படையணியில் எத்தகைய போர் முறைகளி னையும் எதிர் கொள்ளக்கூடிய பயிற்சி பெற்ற வீரர்கள் காணப்பட்டனர்.

ருவான் வெல்லையில் இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தில் எஹலப்பொலவின் வீரர்கள் பலர் உயிரிழந்தனர். ஒரு தொகை வீரர்கள் உயிரிழந்தனர். ஒரு தொகை வீரர்கள் தப்பி ஓடினர். எஹலப் பொலவும், எக்னெலி கொடவும் மேற்கொண்ட கிளர்ச்சி தோல்வியில் முடிந்ததால் அவர்களுக்கு ஆங்கிலேயரின் உதவியினை நாடி ஜோன் டொய்லியி டம் தஞ்சம் அடைவதே ஒரே வழியாக அமைந்தது. இரத்தினபுரி சென்று தனக்குத் தேவையானவற்றினை எடுத்துக் கொண்டு களுகங்கை வழியாக கொழும்பில் உள்ள ஆங்கிலேயரின் கோட்டையினை நோக்கி எஹலப் பொல சென்றான்.

எஹலப்பொலவின் கிளர்ச்சியினை வெற்றிகர மாக முடிவுக்குக் கொண்டு வந்த மொல்லிக் கொட தன்னால் கைது செய்யப்பட்ட 47 பேருடன் கண்டியை அடைந்தனர். இவர்கள் மாத்திரம் அல்லாது மன்ன னுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் என சந்தேகத் திற்குள்ளானவர்களும் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட னர். ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்த எஹலப்பொல அவர்களுடைய படையுடன் கண்டியை நோக்கி வரலாம் என வதந்திகள் பரவின. அரச விரோதச் செயற்பாடுகள் தொடர்பான சந்தேக நபர்களுக்கு தண்டனை வழங் கும் இடமாகவும், கொலைக் களமாகவும் நான்கு தேவாலயங்களில் ஒன்றாகிய நாத தேவாலயத்தின் முன்னால் உள்ள தேவசன்சித்த எனப்படும் பிரதேசம் தேர்ந்தெடுக்கப்பட்டது. புனித தலதா மாளிகைக்கு அருகில் காணப்பட்ட இவ் இடம் பௌத்தர்களின் முதன்மையான பிரதேசங்களில் ஒன்றாக அமைந்தி ருந்தமையினால் கண்டிய பௌத்தர்களின் மத்தியில் அரசுக்கு எதிரான வெறுப்புணர்வு காட்டுத்தீயாகியது. எஹலப் பொலவின் மனைவி மற்றும் குழந்தைகள் என்போர் கொடூரமாக மன்னனால் கொலைத் தண் டனைக்கு உட்படுத்தப்பட்டமை மேலும் வெறுப்பினை தீவிரமாக்கியது.

## 1815க்குப் பின்னரான எஹலப்பொல

ரொபேர்ட் பிரௌன்றிக் கண்டி மீதான படையெடுப் பினை 1815இல் மிகவும் திட்டமிட்டுப் படையெடுத்தார். தஞ்சம் அடைந்திருந்த எஹலப்பொல மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பற்றியும் மத்திய மலைநாட்டு இராசதானி பற்றியும் சரியான விவரங்களினையும் அவசியமான யோசனைகளினையும் ஆளுநரிடம் தெளிவாக விளக்கினான். இப் படையெடுப்பின் போது குறைபாடுகள் ஏதும் நிகழா வண்ணம் எஹலப்பொல படைகளினை வழிவகுத்தான். என கலாநிதி கொல்வின் R.D.சில்வா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய நகரங்களில்

இருந்து புறப்பட்ட ஆங்கிலேயப் படையணிகள் 1815 பெப்ரவரியில் கண்டியைக் கைப்பற்றி போமுரே எனும் இடத்தில் மறைந்திருந்த மன்னரைக் கைது செய்தனர்.

1815.03.02 இல் கண்டியைப் பிரதானிகளுக்கும், பிரித்தானியருக்கும் இடையில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட கண்டி உடன்படிக்கை கைச் சாத்திடப் பட்டது. இவ் உடன்படிக்கையில் எஹலப் பொல, மொல்லிக்கொட, ரத்வத்த, கலகொட, துலவிமிலாவை போன்ற பிரதானிகள் கையொப்பமிட்டனர். ஆங்கிலேயர் கண்டியில் தமது நிர்வாகத்தில் மொல்லிக் கொடவினை முதல் அதிகாரமாக நியமித்துக் கொண்டதனால் எஹலப்பொல எவ்வித பதவிகளும் வேண்டாம் என ஒதுங்கி நின்றான். உடன்படிக்கை உருவாகிய பின்னர் பிரதானிகள் பிரித்தானிய நிர்வாகத்தினை எதிர்த்தனர். அவர்களிடையே ஒற்றுமை இல்லாமையினால் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எஹலப் பொலவினை ஆள்பதி சந்தேகத்துடன் கவனித்து வந்தார்.

1817இல் ஊவாவின் வெல்லஸ்ஸப் பகுதியில் கிளர்ச்சி ஆரம்பமாகியது. ஆங்கிலேயரின் கோரமான ஆட்சியில் சிக்கி சிதறுண்டு பற்பல பாதிப்புக்களினை எதிர் நோக்கியிருந்த மக்கள் ஆங்கிலேயரின் ஆட்சியில் வெறுப்புற்றிருந்த பிக்குகள் போன்றோரும் கலகத்திற்கு ஆதரவு வழங்க கலகம் மலையகத்தின் பல பகுதிகளுக்கும் பரவியது. கிளர்ச்சியினை அடக்க கெப்பட்டிப் பொல தலைமையில் படை அனுப்பப்பட்ட போது அவன் கலகக்காரர்களுடன் இணைந்தான் வெல்லச மக்களின் ஆதரவினை நன்கு பெற்ற கெப்பட்டிப் பொலவின் தலைமைத்துவம் கலகத்தினை விரிவுபடுத்தியது. எனினும் 1818 இல் ஆங்கிலேயரின் படை வலிமை, கலகத் தலைவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமை இன்மை காரணமாக கலகம் அடக்கப்பட்டது.

கலகத் தலைவர்களுள் மடு கல்லவும் ,கெப்பட்டிப் பொலவும் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். எவாலப் பொல உள்ளிட்ட தலைவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மொரிசீயஸ்தவுக்கு நாடுகடத்தப்பட்டனர். படை மன்றினால் 47தலைவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களுள் 28 பேர் கொலைத் தண்டனைக்கும் 10பேர் நாடுகடத்தப்பட்டும் 08 பேர் மன்னிப்பும் பெற்று இருந்ததோடு ஒருவர் இயற்கை மரணமும் எய்தினர். பின்னர் 1818 பிரகடனத்தின் மூலம் ஆங்கிலேயர் ஆட்சி உறுதியாக கண்டி மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்டது.


## எஹலப் பொலவின் இறுதிக்காலம்

மொரிசீயஸ் தீவில் பெல்பஸ் முசாஸ் எனும் இடத்தில் எவாலப் பொல வாசிப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.மேலும் சிங்கள கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.ரிச்சர்ட் விக்கார்சின் அறிக்கையின்படி எகலப்பொல வயிற்றோட்ட வியாதியினால் பீடிக்கப்பட்டு 1829.04.04 அன்று உயிரிழந்தார். அச் சந்தர்ப்பத்தில் ஆளுநராக இருந்த எட்வேட் பாண்சின் உத்தரவுக்கமைய லெப்டினன்ட் விக்காசினால் எஹலப் பொலவின் நினைவுத் தூபி அமைக்கப்பட்டது.


## முடிவுரை

எஹலப் பொல ஆசையினால் உந்தப்பட்டு இருந்தமையினால் அரசு பதவிகள், பட்டங்கள், செல்வங்களினை வாரி வழங்கி இருந்த போதிலும் அவன் அரசுக்கு நன்றியுடையவனாக விளங்கவில்லை. கண்டிய மன்னனாலும் பின்னர் பிரித்தானிய ஆள்பதியினாலும் சந்தேகத்துடன் நோக்கப்பட்டு வந்த எஹலப் பொல, மனைவி பிள்ளைகளினை இழந்தும் பின்னர் திருமணம் செய்து கொண்டான். எஹலப்பொல தேசப் பற்றாளனாகவும், சிங்கள பௌத்த விடுதலை வீரனாகவும் ஒரு சாராரால் போற்றப்படும் அதே வேளை தேசத்தினைக் காட்டிக் கொடுத்த துரோகியென ஒரு சாரர் தூற்றவும் செய்கின்றனர். கண்டியின் வீழ்ச்சியில் பிரதானியாக விளங்கிய எஹலப்பொலவின் பங்கு பெரிய அளவில் தாக்கம் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

**இ.றவீனா**
2019 A/L கலைப்பிரிவு
(பல்கலைக்கழக புதுமுக மாணவி)



# கல்வி முகாமைத்துவத்தில் இலங்கையில் காணப்படும் உலகளாவிய பிரச்சினைகளில் கல்வியின் தரவுறுதி தொடர்பான நிலைமைகள்.



## அறிமுகம்.

உலகமயமாக்கம் என்பது உலகத்தின் தேசங்களை அவற்றில் வாழும் பிரஜைகளை ஒருங்கிணைக்கும் ஒரு தொடர் செயல்முறையாகும். உலக நாடுகளின் எல்லைகளைக் கடந்து அது பொருளாதார, தொழினுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புக்காக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன் அவர்கள் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது.

**உலகமயமாதலில் கல்வி முக்கிய மாற்றங்களை பெற்றுள்ளது.**

கல்விசார் முதலீடுகள் நாடுகளுக்கிடையே அதிகரித்து வருகின்றன. சர்வதேச பல்கலைக்கழகங்கள் பல்வேறு நாடுகளில் வளாகங்களை நிறுவியுள்ளன. இவ்வாறான துறைகளுக்கு அதிக முதலீடுகளை வழங்குகின்றன. வியாபார நிறுவனங்கள் இலாபகரமான முதலீடு செய்யும் துறையாக கல்வியை கருதி அவற்றில் ஈடுபடுகின்றன. இவை பரவலான கிளைகளை நிறுவி அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்குகின்றன. கல்வி மாற்றங்களை தீர்மானிக்கக் கூடிய தொழில்நுட்பம் உலக ரீதியாக மாற்றியமைக்கப்பட்டு, பொதுவானதாக்கப்பட்டு வருகின்றது. கல்வித் தொழில்நுட்பம் பயிற்சி அளவிடுதல், கருவிகளையும், உள்ளீடுகளையும் உற்பத்தி செய்தல் என்பன அதிகரித்துள்ளது. மின்னியல் உள்ளீடுகள், வன்பொருட்களை உற்பத்தி செய்வதிலும் சர்வதேச ரீதியில் நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

கல்விசார் மனித வளத்தின் நகர்வு உலக ரீதியில் அதிகரித்துள்ளது. விரிவுரையாளர்கள், துறைசார் நிறுவனங்கள், ஆய்வாளர்கள் உலக ரீதியில் பல நாடுகளுக்கும் அசைதல் அதிகரித்துள்ளது. பல்வேறு கல்வி சார் நிறுவனங்களுக்கும், செயற்திட்டத்திற்கும் பெருந்தொகையான ஆளணியினர் அசைவதற்கான அனுமதியும் ஊக்குவிப்பும் அதிகரித்துள்ளது. உலகளாவிய ரீதியில் கற்றல் - கற்பித்தல் முறைகளும் பொதுவானதாக்கப்பட்டு வருகிறது. தொலைக்கற்றல், ஒளிநாடாக் கலந்துரையாடல், மின்னியில் கற்றல் - கற்பித்தல் முறையில் வந்துள்ளன. அத்துடன் மின்னியல் நூல்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. கல்வித் தகுதிகள் அங்கீகரிக்கப்படல் முன்பு அரச கல்வி நிறுவனங்களுக்கும், அரச பல்கலைக்கழகங்களுக்கும் உரித்தானதாக இருந்தது. ஆனால் உலகமயமாவதில் தர உறுதிப்பாடு என்பன எண்ணக்கருவின் அடிப்படையில் தனியார் கம்பெனிகளினால் வழங்கப்படும் பட்டங்களுக்கும் உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் கிடைக்கிறது.

**இலங்கையின் கல்வி**

இன்று உலகமயமாதல் மற்றும் கல்வி சர்வதேசமயமாதல் என்னும் தொடர் நடவடிக்கைகளால் இலங்கையின் கல்வியில் விரைந்த பெரும் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. உலகக் கல்வி மாநாடுகள் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும் உடன்பாடுகளுக்கேற்றாற் போல் கல்வியின் உள்ளடக்கங்களும் ஒழுங்கு முறைகளும் மாற்றமடைந்து வருகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் கல்வி தனியார் மயப்படும் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன. உலகளவிலான வேலையுலகு தொழிநுட்பம், தகவல் தொழிநுட்பம், விஞ்ஞானம் என்பவை சார்ந்து விரைந்த மாற்றங்களுக்கமைவாகவும் நவீன பொருளாதார, வர்த்தக உலகளா விய மாற்றங்களுக்கமைவாகவும் கல்வியின் போக்கு மாற்றமடைந்து வருகின்றது. இந்நிலைமைகளை உள்வாங்கி அரசுகள் தமது கல்விக் கொள்கைகளை வகுக்க வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது.

இன்று இலங்கையில் கல்வியானது உலக நாடுகளின் பரிந்துரைத் தேவைக்கு ஏற்றவாறு திட்டமிடப்படுகிறது. கல்விக்கொள்கைகள், கலைத்திட்டம், பாடத்திட்டம் என்பன உலக நாடுகளின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது. சர்வதேச தொழில் சந்தைகளின் தேவைக்கு ஏற்றவாறு மனித


வளத்தை உற்பத்தி செய்கின்ற கல்வி இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கையில் 759 பிரிவெனாக்கள் இயங்குகின்றன. 106 தனியார் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. 294 சர்வதேச பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. சர்வதேச பாடசாலைகள் லண்டன் க.பொ.த சாதாரண தரம் உயர்தரம் போன்ற கலைத்திட்டத்தை, பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன. மேம்பாட்டுத் திட்டங்கள், உள்ளீடுகள் என்பன உலகின் கல்வித் தரத்திற்கு சமமாக இலங்கையின் கல்வியும் வளர நடவடிக்கை எடுத்து வருகின்றன. குறிப்பாக பாடத்தின் தரம், கொள்கை, திட்டமிடல் என்பன உலகளாவிய ரீதியில் பேணப்படும் கல்விச் செயற்பாடுகள் இலங்கையில் செயற்பட நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அனைவர்க்கும் கல்வி" (EFA) என்னும் கோட்பாட்டுடன் "அனைவர்க்கும் தரமான கல்வி" (QEFA) என்னும் கோட்பாட்டின் வழி கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கையும் வழங்கப்படுகின்ற கல்வி தரமானதாக அமைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தரமான கல்வி என்பது உலகளாவிய நியமங்களுடன் பயணிப்பதாகும். உலகளாவிய வேலைவாய்ப்பு, தொடர்பாடல் விழுமியங்கள், மனித உரிமைகள், ஒத்துழைப்பு, வர்த்தகம், நுண்ணறிவு, விஞ்ஞானம், தொழிநுட்பம் முதலியவற்றுடன் இது தொடர்புபட்டதாகும். கல்வியின் தரம் என்பது கல்வியை உலகளாவிய ரீதியில் ஒன்றிணைக்கும் கோட்பாடாகும். கல்வியின் தரம் என்பதன் வரைவிலக்கணம் புலப்படு பொருளை விடச் சிக்கலானதாகும். வாடிக்கையாளர் நோக்கினையும், விபரக்கூற்று அடிப்படையிலான நோக்கினையும் இங்கு கவனத்திற் கொள்ளல் வேண்டும். கல்வியின் தரம் என்பதற்கு "உன்னதம்", "தேவைக்குப் பொருத்தம்", "விதிவிலக்கு", "உயர்த்துதல் அல்லது முன்னேற்றுதல்" எனப் பல்வேறு தரப்பினர் வெவ்வேறு வியாக்கியானங்களைக் கூறுவர். உலகளாவிய ரீதியில் பேணப்படும் கல்வித்தரம் இலங்கையிலும் சமமான முறையில் பேணப்படுவதற்கு உலகமயமாக்கல் துணைபுரிந்துள்ளது. சர்வதேச ரீதியில் இலங்கையிலிருந்து ஆசிரியர்கள், அதிபர்கள், நிர்வாகிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. கலைத்திட்ட வழங்கலைப் பொறுத்தமட்டில் உலகத்தரத்திற்கு சமமாக அவற்றைப் பேணும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆசிரியர் கல்வி மத்திய நிலையம் அமைத்தல், தரமான பாடநூலை எழுதுதல், தரமான கதிரை மேசைகளைப் பயன்படுத்துதல் என்பவற்றில் உலகத்தரத்தை இலங்கையும் பேணுவதைக் காணலாம். இன்று இலங்கையில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் நூலகத்திற்கான, கணினி தேவைகளுக்கான கதிரை மேசைகள் சர்வதேச தரத்தை பெற்றுள்ளன.

உலகமயமாக்கலில் தொழில்நுட்ப தகவல் மையத்தின் முக்கிய இடத்தை உலக நாடுகள் பெற்றுள்ளன. அவ்வகையில் இலங்கையில் சர்வதேச தரத்தை பேணும் வகையில் மாணவர் பயிற்சி, ஆசிரியரின் தரத்தை மேம்படுத்தல், திணைக்கள அதிகாரிகளை மேம்படுத்தல் போன்றவற்றிற்காக தொழில்நுட்பத் தகவல் பாடத்தை பாடசாலைகளிலும், ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலும், கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளமையைக் காணலாம். உலகமயமாதலின் விளைவுகள் இலங்கையின் உயர்கல்வியில் பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்துகிறன. பட்டதாரியின் தரத்தை மேம்படுத்துவதற்கு புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்தல், நவீன தொழில் சந்தைகளோடு இணையக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கல் முதலியவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய உயர் கல்வி முறைகளுக்கு தேவைப்படும் அபிவிருத்திசார் செயற்பாடுகளுக்கு இடமளிப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும் கடந்த காலங்களில் உலக நாடுகளிலிருந்தும், பிராந்தியங்களில் இருந்தும் கல்வியாளர்களினதும், புலமையாளர்களினதும் கற்பவர்களினதும் நகர்வுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிலை இருந்துள்ளது. அந்த வகையில் கற்றல் செயற்பாடுகளை மதிப்பிடுதல், கற்றலின் பல இன்றியமையாக் கூறுகளை மேம்படுத்துதல், கற்பவருடைய வாழ்நாள் முழுமைக்குமான குறிக்கோள்களைச் சிறப்பாகச் செய்தல், மற்றும் இறுதியில் கற்பவர்களுக்கான பொருத்தமானதொரு நியமத்தையும் அல்லது சட்டகத்தையும் தெளிவையும் வழங்குவதல் என்பவற்றிற்காக உயர்கல்வித்துறைகளில் மிகவும் இன்றியமையாத ஒர் அடிப்படை ஒழுங்கு முறைகளை விருத்தி செய்வதற்கு இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமமானது (SLQF) முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. இலங்கை கல்வித் தகைமை நியமத்தின் (SLQF) உருவாக்கமானது கற்றலிலும் கற்றல் - கற்பித்தல் முறைகளிலும் பல கூறுகளையும் செயற்பாடுகளையும் விருத்தி செய்வதற்கு உதவுகிறது. அத்துடன் உள்நாட்டு கல்வியின் தரத்தை அதிகரிக்கும் அதேவேளை வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுடனான தொடர்பை மேம்படுத்துவதற்கும் தெளிவானதொரு ஒழுங்குமுறையை வழங்குகின்றது.

**திரு.இ.சந்திரசேனா**
PGDE, BA, Dip.in.Teaching
Dip in Counselling



# நேர்காணல்

## அபிராமி
## (களனிப் பல்கலைக்கழகம்)

சந்திப்பு
**க.திலக்சிகா** (2021 கலைப்பிரிவு)

## எமது இலக்கில் உறுதியுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம்.

**கேள்வி : உங்களது ஆரம்பப் பிரிவு கல்வி அனுபவத்தைக் குறித்துக் கூறுங்கள்**

**பதில்** : நான் இன்று சிறந்த மாணவியாக மிளிருவதற்கு முதற்காரணம் எனது தாயும் தந்தையும். சிறு வயது முதலே எனக்கு சிறந்த வழிகாட்டிகளாகவும், ஆசிரியராகவும் அவர்களே இருந்தனர். நான் எனது முன்பள்ளிக் கல்வியை யாழ்ப்பாணத்திலேயே கற்றேன். அந்தக் காலத்திலேயே கல்வியோடு விளையாட்டுப் போட்டிகள், நாடகம், நடனம் என்பவற்றைச் செய்வதற்கு எனது பெற்றோர்களே ஊக்கமளித்தனர்.

"தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்று பெரியோர்கள் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அது போல் எனக்குச் சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டல் கிடைத்தது. திருமதி.வ.சிறிதரன், திருமதி.ரெ.ரவீந்திரன், திருமதி.நா.அச்சுதன் ஆகிய ஆசிரியைகள் எனது வகுப்பாசிரியைகளாக தரம் 1 - 5 வரை இருந்தனர். இவர்கள் நான் ஆரம்பக் கல்வியை சிறந்த முறையில் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வழிகாட்டினர். இவர்களோடு எனது ஆரம்பக்கல்வி ஆங்கில ஆசிரியை திருமதி.செ.தயாபரனும் சிறந்த முறையில் கல்வி கற்பித்தார். தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டி, சாரணியர் என சகல துறைகளிலும் நான் சிறந்து விளங்க பாடசாலை அதிபர் திருமதி.இ.சிவராசா அவர்கள் எனக்கு ஊக்கமளித்தார்.

ஆரம்பக்கல்வியைப் பயின்று இடைநிலைக் கல்விக்கு செல்லும் போது தரம் 5 வரை எனது நண்பர்களாக இருந்தவர்கள் நகரப் பாடசாலைக்கு சென்றுவிட்டார்கள். நானும் எனது அம்மாவிடம் கூறினேன் என்னையும் நகரப் பாடசாலைக்கு மாற்றி விடுங்கள் என்று. ஆனால் எனது அம்மா எனது விருப்பத்தை நிராகரித்து விட்டார். மனதில் கவலை இருந்தாலும் எனது கல்வியை விருப்பத்தோடு தொடர்ந்தேன். அவ்வேளை எனக்கு தரம் 6இல் சிறந்த வகுப்பாசிரியை ஒருவர் கிடைத்தார். திருமதி.கோ.சுரேஸ்குமார். அவர் கணிதபாட ஆசிரியை மட்டுமல்ல எங்கள் வாழ்வின் ஏணிப்படி. கல்வியோடு விளையாட்டுக்களிலும் நாங்கள் எமது கவனத்தை திரும்ப அவரே காரணம். படிப்போடு மட்டும் நாங்கள் இருக்கும் போது 1ஆம் பாடம் வகுப்பிற்குள் வந்து எங்களுக்கு கூறுவார். படிப்போடு இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் உங்கள் ஆர்வத்தைக் காட்டி திறமையை வளருங்கள் என்று. அன்று தொடங்கியது எமது விளையாட்டு வரலாறு

**கேள்வி : நீங்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கொண்டமை பற்றி ....**

**பதில்** : நாம் முதன் முதலாக கரப்பந்து பயிற்சிக்கு சென்றோம். பின்பு திரு.பகீரதன், திரு.பாபுதரன் ஆசிரியர்களின் வழிகாட்டலின் துடுப்பாட்டம், கொக்கி, பூப்பந்து, கூடைப்பந்துப் பயிற்சிகளுக்கு சென்றோம். அவ்வாறு பயிற்சிகளுக்கு செல்லும் போது கோமதி ஆசிரியை, நிதர்சினி ஆசிரியை, மிறோஜினி ஆசிரியை போன்ற ஆசிரியர்கள் ஊக்கமளித்தார்கள். விளையாட்டுக்களுக்கு செல்லும் போது தவறவிட்ட பாடங்களை மேலதிக வகுப்புக்கள் மூலம் எமக்கு கற்பித்தார்கள். நாங்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு தரம் 6 -10 வகுப்பு வரை செல்லவில்லை. பாடசாலையில் மட்டுமே பயின்றோம். அப்போது "A" வகுப்பிற்கும் "B" வகுப்பிற்கும் பாடங்களில் அதிக புள்ளி எடுப்பதற்கு போட்டிகள் நிலவும். ஆதலால் நாங்கள் விளையாட்டிற்குச் சென்றாலும் எமது கல்வியைக் கைவிடவில்லை.

**கேள்வி : விளையாட்டைத்தவிர வேறு என்ன நிகழ்வுகளில் பங்கு கொண்டீர்கள்?**

**பதில்** : விளையாட்டு மட்டுமல்லாமல் ஆங்கில தினப் போட்டி, தமிழ்த்தினப்போட்டி, வினாடி வினாப்போட்டி என சகல போட்டிகளுக்கும் சென்றோம். க.பொ.த சாதாரணப் பரீட்சைக் காலகட்டத்தில் கூட நான் விளையாட்டுக்களுக்கும், போட்டிகளுக்கும் சென்றேன். ஆனால் நான் எனது கல்வியைக் கைவிடவில்லை. என்னோடு விளையாட்டில் ஈடுபட்ட எனது நண்பர்களும்

கல்வியில் சிறந்து விளங்கினார்கள். க.பொ.த சாதாரணதரப் பரீட்சை நிறைவடைந்து பெறுபேறுகள் வெளியாயின. பாடசாலையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களில் என்னோடு சேர்த்து 5 பேர் விளையாட்டில் ஈடுபட்ட மாணவர்கள்தான்.

**கேள்வி : கல்வியையும் இணைபாடவிதான செயற்பாடுகளையும் எவ்வாறு இணைத்துச் செல்ல முடிந்தது?**

**பதில்** : விளையாட்டில் ஈடுபடுவதாலோ, இணைபாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபடுவதாலோ அது கல்வியை ஒரு போதும் பாதிக்காது. நாம் எமது இலக்கில் உறுதியாக நின்று செயற்பட்டால் வெற்றி பெறலாம்.

**கேள்வி : உயர்தரக்கல்வி பற்றிக் கூறுங்கள்**

**பதில்** : நாங்கள் க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையையும், வர்த்தகத்துறையையுமே தேர்ந்தெடுத்தோம். நான் கலைத்துறையில் வரலாறு, தமிழ், அரசியல் பாடங்களை தேர்ந்தெடுத்துக் கற்றேன். க.பொ.த உயர்தரத்திலும் சிறந்த ஆசிரியர்கள் எனக்கு கிடைத்தார்கள். பாபு சேர், கஜேந்திரன் சேர், உஷானந்தினி ஆசிரியை அத்தோடு பாடசாலை அதிபர் திருமதி.செ.தேவராஜ் அவர்களும் ஏனைய ஆசிரியர்களான ஜெயசிறி சேர், பகீரதன் சேர், சுபாசினி ஆசிரியை, சாந்தினிதேவி ஆசிரியை, வதனா ஆசிரியை, ஜனதா ஆசிரியை, வினித்தா ஆசிரியை, நிஷாந்தி ஆசிரியை, பரணிசேர் எல்லோரும் சிறப்பாக என்னை வழி நடாத்தினார்கள். சாரணியர், மாணவ முதல்வி, விளையாட்டுத்துறை தலைவி என சகல துறைகளிலும் எனது திறமையை வளர்த்து சிறந்த பெறுபேற்றைப் பெற்று இன்று பல்கலைக்கழகம் செல்வதற்கு அத்திவாரமிட்டது எனது பாடசாலையும் ஆரம்பம் முதல் என்னை வழி நடாத்திய ஆசிரியர்களுமே ஆவர்.

நான் தரம் 6இல் வேறு பாடசாலைக்கு மாறி செல்வேன் என்ற முடிவை எடுத்திருந்தால் இன்று பல்கலைக்கழகம் சென்றிருப்பேன் ஆனால் எனது திறமையை வளர்க்க சந்தர்ப்பமும் அமைந்திருக்காது. சிறந்த ஆசிரியர்களும் கிடைத்திருக்க மாட்டார்கள்.

**கேள்வி : மாணவிகளுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை....**

**பதில்** : சரியான பாடத்தெரிவை மேற்கொண்டு சிறந்த ஆசிரியர்கள் அமையப்பெற்றால் எமது எதிர்காலம் சிறப்பாக இருக்கும். அத்தோடு கல்வி கற்கும் பாடசாலையை நேசியுங்கள். சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எதிர்காலத்தில் சிறந்த பதவிகளில் இருக்கும் போது பாடசாலைப் பற்றை மறந்து விடாமல் "எமது பாடசாலை" என்ற எண்ணத்தை மனதில் நிறுத்தி வையுங்கள். அத்தோடு கற்பித்த ஆசிரியர்களையும் என்றும் மனதில் நிலை நிறுத்துங்கள்.

பாடசாலைக் காலம் என்பது ஒவ்வொருவருடைய வாழ்க்கைப் புத்தகத்திலும் மறக்கமுடியாத அத்தியாயம். எனது வாழ்விலும் அவ்வாறு தான். உலகத்தில் மிகப் பிடித்த விடயம் எது? என்று யாரவது எனைக்கேட்டால் பாடசாலை மூலம் எனக்குக் கிடைத்த நண்பிகளும் சிறந்த ஆசிரியர்களும் தான். எனது பாடசாலைக் காலத்தைத் தான் முதன்மையாகக் கூறுவேன். எனவே எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலையின் பெருமையை நிலைநாட்டுவதற்கு மாணவிகள் அயராது பாடுபடவேண்டும் என மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# ஆசிரியர் தினம்



வாழ்க்கையில் பல விடயங்கள் நடந்தாலும் சில விடயங்களை மட்டுமே நம்மால் நினைவு கூர முடியும். அப்படிப்பட்ட சில சுவாரஸ்யமான விடயங்களின் வரிசையிலே மீண்டும் அதை நினைவு கூருவதிலே மகிழ்ச்சியடைகின்றேன். அது தான் 2019 எமது பாடசாலையின் ஆசிரியர் தின விழாவாகும். ஒரு ஆலயத்தில் கடவுள் எவ்வளவு முக்கியமான இடத்தில் உள்ளாரோ அதே போலவே ஓர் பாடசாலையில் ஆசிரியர்களும் உள்ளனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள் எமது தந்தை தாயின் பின் நன்கு அறிந்தவர்களும் நம்மை நல்வழிப்படுத்துபவர்களும் ஆசான்களே என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அந்தப் பொன்மணிகளை வரவேற்கும் முகமாக மங்கல வாத்தியங்களுடன் பாடசாலை முன்வாயிலில் இருந்து நிகழ்வின் பிரதான மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் நிகழ்வானது மங்கலகரமாக நிறைவுபெற இன்னிசைக் குரல்களால் இறைவணக்கம் இடம்பெற்று விழாவானது வெகு விமர்சையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆசிரியர்கள், மாணவர்களால் வரவேற்புரையின் மூலம் வரவேற்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து நிகழ்வுகள் யாவும் தொடர்ந்து நடைபெற்றன. இந் நிகழ்வில் மாணவர்கள் தமது திறமைகளை முன் வைக்கக் கூடியதாக இருந்தது. இது மட்டுமல்லாமல் ஆசிரியர்களும் தமது திறன்களை வெளிக்காட்ட தமது குரலால் இன்னிசைக் கீதம் இசைத்தனர். அதன் வரிசையில் ஆசிரியர்கள் பலர் பல்வேறு விடயங்களை நகைச் சுவையாகக் கூறி அவ் அரங்கை மகிழ்வில் மூழ்க வைத்தனர். தொடர்ந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் மகிழ்வூட்டும் முகமாக விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.

எந்நிகழ்வை எடுத்தாலும் சரி அந் நிகழ்வை மிக விமர்சையாக செய்யவே மாணவர்கள் ஆசைப்படுவார்கள். ஆனால் அவ்வாறு செய்வதற்கு மண்டபவசதி இல்லையென்றாலும் எவ்வாறாவது நிகழ்வை செய்து முடிப்பார்கள். இந் நிகழ்வும் அவ்வாறே நிகழ்ந்தது. இந் நிகழ்வில் கலந்து கொண்டபின் எமது பாடசாலையில் மண்டபம் இல்லாத குறையே நாம் அறியவில்லை. அவ்வாறு வெகுவிமர்சையாகக் கொண்டாடினார்கள் இவ்வாறு எல்லா நிகழ்வுகளும் அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து எனது பதிவை நிறைவு செய்கிறேன்.

**சி.ரோசிகா**
A/L 2021 - கலைப்பிரிவு

## ஆற்றல் மிக்க அதிபராக திகழ்ந்தவர்



செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி
(1992 - 2004)

யாழ் மாவட்டத்தின் தலைசிறந்த பெண்கள் பாடசாலைகளில் ஒன்றாக பல தசாப்தங்களைக் கடந்து விளங்குவது யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை ஆகும். 1992ஆம் ஆண்டில் இப்பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் யுத்த நெருக்கடியினால் இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந் நிலையில் அதுவரை கடமையாற்றிய அதிபர் இடமாற்றம் பெற்று சென்றுவிட இடம் பெயர்ந்த நிலையில் இயங்கி வந்த பாடசாலையைப் பொறுப்பேற்றவரே செல்வி. போஷேந்திரா தேவி கந்தசாமி ஆவார்.

இவர் இக் கல்லூரி வரலாற்றில் கடமையாற்றிய அதிபர்கள் மத்தியில் தனக்கென ஒரு தனித்துவத்துடன் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. பல்வேறான துன்பங்களின் மத்தியிலும் தனது தன்னம்பிக்கை குறையாமல் செயற்பட்டவர். நேர்மை, எளிமை, நியாயம், கண்டிப்பு, கண்ணியம் போன்ற உயர் விழுமியங்களைக் கொண் டவராகத் திகழ்ந்துள்ளார்.

1976ம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி ஆசிரிய நியமனம் பெற்று நுவரெலியா அல்மின் ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தனது சிறப்பான பணியினை மேற்கொண்டார். அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டார். சிறந்த ஆசிரியையாகவும், கொத்தணி அதிபராகவும் தனது சேவையை சிறப்பாக மேற்கொண்டுள்ளார்.

1992ஆம் ஆண்டு அரசியல் நிலை குழப்பம் அடைந்திருந்த நிலையில் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையைப் பொறுப்பேற்றார். இப் பாடசாலையின் முன்னேற்றத்தில் தன்னை பெரிதும் அர்ப்பணித்தார். இவர் அதிபராக கடமையாற்றி காலத்தில் யுத்த நெருக்கடியால் பாடசாலை வட்டு இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இந்த சூழ்நிலையிலும் தளராது பாடசாலையை தனியாக இயக்குவதற்காக வைத்தியர் பகீரதன் வீட்டிற்கு இடமாற்றம் செய்தார். இவரின் விடாமுயற்சியால் கொட்டகைகள் அமைத்து வகுப்புக்கள் நடைபெற்றன.

1996ஆம் ஆண்டில் மீள் குடியமர்வின் பின் இப் பாடசாலையைக் கட்டியெழுப்புவதில் அயராது உழைத்தவர். கல்விப் பெறுபேறுகளிலும் சிறப்பான இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர் திறனை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கண்டவர். இவர் இப்பாடசாலைக்கு ஆற்றிய சேவைகள் அளப் பெரியன. பற்றைகளுக்கும் மிதிவெடிகளுக்கும் அஞ்சா மல் அவற்றை அகற்றி பாடசாலை புனரமைப்புச் செய்வதற்காக பணிபுரிந்தார். இவரின் சேவையைப் பாராட்டி 2004ம் அண்டு யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் மலர்க் குழவினால் மணி விழாக் காணும் அதிபருக்காக போஷேந்திர மலர் எனும் பண்மகள் வெளிவிடப்பட்டிருந்தது. பெரும் பணியாற்றிய இவர் 28.10.2009 அன்று இயற்கை எய்தினார்.

இ.அபிர்ணா
கலைப்பிரிவு - 2020

## தலைமைத்துவப் பண்பு நிறைந்தவர்



யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் தனது திறன்களை வெளிப்படுத்திய ஆளுமைமிக்க மாணவர்களில் ஜனுசியா எனும் மாணவியும் ஒருத்தி ஆவாள். க.பொ.த சா/த தரப் பரீட்சையில் 7A எனும் சிறந்த பெறுபேற்றினை பெற்று தனது உயர்தரத்தில் கலைப் பிரிவினைத் தெரிவு செய்து கல்வியை ஆர்வத்துடன் தொடர்ந்தார். 2018 க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 2AC எனும் பெறுபேற்றினை பெற்றுப் பாடசாலைக்கு பெருமை சேர்த்தார் இன்று பேராதனைப்பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி தனது பல்கலைக்கல்வியை ஆரம்பித்துள்ளார்.

பாடசாலையில் கல்வி பயின்ற காலப்பகுதியில் தனது தனித்துவமான செயற் பாடுகளை முன்னெடுத்து பாடசாலையின் வெற்றிக்கு தனது பங்களிப்பினை வழங்கியமை பெருமைக்குரியதொன்றாக அமைந்துள்ளது. 2018 ஆண்டு எமது பாடசாலையின் சிரேஷ்ட மாணவதலைவியாகத் விளங்கி மாணவர்களின் ஒழுங்கமைப்பு மற்றும் பாடசாலையின் இணைபாடவிதான செயற்பாடுகள் என்பவற்றுக்கு பூரணமான பங்களிப்பினை வழங்கினார். மாணவிகளின் வினையாற்றலை மேம்படுத்துவதற்கும் அவற்றை பாடசாலையின் மேம்பாட்டுக்கு பயன்படுத்தும் வகையிலும் seven star எனும் நிகழ்ச்சித் திட்டத்தை பயன்உள்ள வகையில் நடைமுறைப்படுத்தி பலரினதும் பாராட்டுகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சசிகலா
கலைப்பிரிவு - 2020

## சிறுவர் தினம்

பூக்கள் மலர்ந்த தோட்டத்தின் நடுவே
சிட்டுக் குருவிகள் விளையாட்டாய்
சில்லறை காசுகள் சிணுங்கி ஓட
சட்டென வரும் சத்தம் போல
எங்கும் சிறுவர் குரலே!

வீதியுலா வந்த புதுமண நங்கை
நாணத்தின் புன்னகை போல
எம்முகமும் திருமுகமாய்
தித்திக்கும் நன்நாள்
இதுவே சிறுவர்தின திருநாள்.

அ.அஸ்விதா
9B




# பண்மகள் இதழ் வருகையும் பதிவும்















ஈழத்தின் பெண்கல்விப் பாரம்பரியத்தில் பெண்களை மையப்படுத்தி உருவாக்கப்பெற்ற பாடசாலைகள் பிரதான இடத்தை வகித்துள்ளன. இவற்றில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை முக்கியமானது. 1823இல் அமெரிக்க மிஷனரிமாரின் ஆதரவில் பாலர்பள்ளியாகத் தொடங்கிய இப்பாடசாலை 1868 தொடக்கம் 1880 வரை கில்லிஸ் அம்மையாரின் வழிநடத் தலில் விடுதியுடன் கூடிய பெண்கள் பாடசாலையாக மிளிர்ந்தது. 1918 இல் திரு. அல்பேட் கந்தையா போதகரின் காலத்தில் ஆங்கிலப் பாடசாலை என்ற அடையாளத்தைப் பெற்ற தோடு, 1936இல் சுயபாஷா விடுதி பாடசாலையாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. இந்த நெடிய கல்விப் பயணத்தில் அதன் வரலாற்றினைப் பதிவுசெய்யும் மலர்கள் பல காலத்துக்குக் காலம் தமிழிலும் ஆங்கிலத்தி லும் வெளிவந்துள்ளன. அவற்றில் பண்மகள் இதழ் தனியிடத்தினைப் பெற்றுள்ளது.

பண்மகள் இதழ் எப்பொழுதிருந்து தனது பயணத்தைத் தொடங்கியது என்பதைச் சரியாக அறியமுடியவில்லை. 1986 இல் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற கலாவல்லி ஆறுமுகதாசன் அவர்களது பணிநலனைப் பாராட்டும் வகையில் விழாச்சபையால் உலக மதங்கள் என்ற கருப்பொருளில் கலாவல்லி மலர் வெளிவந்துள்ளது. இந்த மலரின் பிரதான பெயர் பண்மகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பண்மகள் இதழ் 1986 இல் வெளிவந்துள்ளமையை உறுதிப்படுத்த முடிகிறது.

1986 இல் வெளியான பண்மகள் இதழ் உலக மதங்கள் தொடர்பான காத்திரமான உரையாடலினை முன் வைத்துள்ளது. இந்த மலரின் மலர்ஆசிரியர்களாக புலவர். திரு. கா. வேல்முருகன் அவர்களும் திரு சி. நடராசா அவர்களும் செயற்பட்டுள்ளனர். மரபுவழிப் புலமையும் நவீன கல்வி அறிவும் பெற்றிருந்த இவர்கள் அன்று பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களாவர்.

“இன்றைய சூழ்நிலையில் சமய வேறுபாடுகளைக் கடந்து இனவுணர்வு அடிப்படையில் ஒன்றுபட்டு வாழும் நிலையே வேண்டப்படுகிறது. மற்றும் அமைதியை இழந்து தவிக்கும் நம்மக்களுக்கு ஒழுக்க நெறியும் தேவைப்படுகின்றன. இவற்றை விளக்கும் வகையில் எடுத்துரைக்கும் சுருக்க நூலாக இது அமையவேண்டும் என்று விரும்பினோம்” என பண்மகள் மலருக்கான தோற்றுவாயில் வேல்முருகன் அவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் இன்றைய காலத்திற்கும் பொருந்துவன வாய் உள்ளன.

நூலுக்கு அணிந்துரை வழங்கிய சு. வித்தியானந்தன், சமயங்கள் போதிக்கும் அன்புநெறி குறித்தும் சமரச நோக்கினை மையப்படுத்தியும் விரிவான கருத்துக்களை முன்வைத்துள் ளார். இந்நூலில் உலக சமயங்கள் குறித்த பத்து கட்டுரைகள் துறைசார்ந்த புலமையாளர் களால் எழுதப் பெற்றுள்ளன.

1986ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2004லேயே பண்மகளின் அடுத்த இதழின் வருகையை இனங் காண முடிகிறது. 1992இல் இருந்து 2004 வரை அதிபராக இருந்து இடப்பெயர்வுகளுக்கு மத்தியிலும் பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுத்தவர் செல்வி. போஷேந்திராதேவி கந்தசாமி அவர்களாவர். இவரது பணிநயப்பை மையப்படுத்தி 2004 இல் பண்மகள் போஷேந்திர மலராக வெளியிடப்பட்டுள்ளது. 50 பக்கங்களில் வெளிவந்துள்ள இந்த மலர் அதிபரின் பணிகள் குறித்தும் பொதுவான விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

2007 இல் இருந்து 2012 வரையான காலப்பகுதி வரையில் 12 பண்மகள் இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது இதழ் 2007 ஒக்டோபர்- டிசெம்பர் காலப்பகுதியை உள்ளடக்கி காலாண்டிதழாக வெளி வந்துள்ளது. திருமதி கி.சிவராஜா அதிபர் அவர்களின் ஆலோசனையில் திரு. சு.ஸ்ரீகுமரன் அவர்கள் பிரதம ஆசிரியராகவும் இணையாசிரியராக திருமதி F.R.J ஜெயந்தன் அவர்களும் திருமதி .தி. கருணீசன், செல்வி .கௌ.இராசதுரை, திரு.பொ.அமிர்தலிங்கம் ஆகியோர் உதவி ஆசிரியர்களாகவும் செயற்பட்டுள்ளனர். இந்த ஆசிரியர் குழு 2009 ஒக்டோபர்- டிசெம்பர் வரை ஆறு இதழ்களை வெளிக்கொணர்ந்துள்ளது. இதில் 2008இல் பாடசாலையின் 185 ஆண்டினை மையப்படுத்தி சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 140 பக்கங்களை உள்ளடக்கிய இம்மலர் பாடசாலையின் வரலாற்று வளர்ச்சி குறித்தும் கல்வி, சமூகம், இலக்கியம்,

விஞ்ஞானம் உள்ளிட்ட விடயங்கள் சார்ந்ததுமான கட்டுரைகள் கவிதைகள் என்பன பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் ஆசிரியர்களாலும் மாணவர் களாலும் எழுதப்பட்டுள்ளன.

2010 தை - வைகாசி காலப்பகுதியை உள்ளடக்கிய ஏழாவது இதழில் இருந்து 2012 வரை பண்மகள் இதழின் ஆசிரியராக திருமதி F.R.J. ஜெயந்தன் அவர்கள் செயற்பட்டுள்ளார். 2010 இருந்து 2012 டிசெம்பர் வரை ஆறு இதழ்கள் வெளிவந்துள்ளன.

2007 இல் இருந்து 2012 வரை வெளிவந்த 12 இதழ்கள் மாணவர்களதும் ஆசிரியர்களதும் ஆக்கங்களைத் தாங்கியனவாய் உள்ளன. கட்டுரைகள், கவிதைகள், கதைகள், பொது அறிவுப்போட்டி உள்ளிட்ட விடயங்க ளோடு குறிப்பிட்ட காலப்பகுதியில் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகள் கல்வி இணைபாடவிதான செயற்பாடுகள்தொடர்பானசெய்திகளும்இடம்பெற்றுள்ளன.

2013 இல் பண்மகள் வெளியீடாக கிருபா மலர் வெளி வந்துள்ளது. 2004 தொடக்கம் 2013 வரை அதிபராக இருந்து ஓய்வுபெற்ற திருமதி கிருபாசக்தி சிவராஜா அவர்களின் மணிவிழாவின் பொருட்டு இம்மலர் 131 பக்கங்களில் வெளி வந்துள்ளது. நான்கு இயல்களைக் கொண்ட இம்மலர் வாழ்த்துச்செய்திகள், அதிபர் பற்றிய நினைவுப் பதிவுகள், ஆய்வுக்கட்டுரைகள், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆக்கங் கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளமை நிறைவாக உள்ளது.


2016இல் பண்மகள் இதழானது அதிபர் திருமதி சி. தேவராஜ் அவர்களின் வழிகாட்டலில் மலராசிரியரான செல்வி. சி. நாமகள் அவர்களதும் மலர்க்குழுவினரதும் முயற்சியால் வெளிவந்துள்ளது. 84 பக்கங்களை உள்ளடக் கிய இந்த மலரில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் 1986 இலிருந்து 2016 வரை பண்மகள் வெளியீடாக 16 இதழ்கள் வெளிவந்துள் ளன. இந்த இதழ் 17வது இதழாக இணைகிறது.

1987, 1992, 1995 ஆகிய காலப்பகுதிகளில் யுத்த சூழலா லும் இடப்பெயர்வுகளாலும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்ட பாடசாலை தொடர்ந்தும் தனது அடையா ளத்தை நிறுவியே வந்துள்ளது. கல்வியிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் மாணவிகள் தொடர்ச்சியா கத் தமது திறமையை வெளிப்படுத்தி வந்துள்ளனர். அதற்குப் பண்மகள் இதழும் சாட்சியாக உள்ளது.

பாடசாலைகளின் பிரதான பணி மாணவர்களை அறிவு திறன் மனப்பாங்கு உள்ள ஆளுமைமிக்க சமூகப் பிரசைகளாக வளர வழியேற்படுத்திக்கொடுப்பதாகும். மாணவர்கள் தமது திறன்களை விருத்திசெய்வதற்கான களமாகப் பாடசாலைகளைப் பயன்படுத்தவேண்டும். பாடசாலைகளில் இருந்து வெளிவரும் நூல்கள் கடந்த காலத்தின் பதிவாகவும் மாணவர்களுக்கு தக்ககளமாக வும் எதிர்காலம் நோக்கிய தரிசனமாகவும் அமையும் தன்மை கொண்டன. நாளைய சமூகத்தை ஆரோக்கிய மான திசையில் பயணிக்க இத்தகு வெளியீடுகள் துணைசெய்யுமெனலாம்.

**ந.குகபரன்**
**ஆசிரியர்**





# ஓவியர் ஆதிமூலம்

ஆதி மூலத்தின் அழுத்தமான தீர்க்கத்துடன் பெரும் வெளியில் ஓடித்திரிகின் கோட்டின் வேகத்தினை உடைய படைப்புக்கள் நவீன உலகில் அதிகம் பேசப்படு கின்றன. இந்திய நவீன ஓவியக் கலை வளர்ச்சியில் நவீனத்துவத்தை நவீனமாகவே கண்டவர் கே.எம்.ஆதி மூலம். உலக ஓவிய அரங்கில் பேசப்பட்டுவரும் சமூகத்திற்கு அப்பால் உலகினால் அங்கீகரிக்கப்பட்ட இவரது படைப்புக்கள் சுதேசியம் மற்றும் மரபுகளை வெளிப்படுத்துகின்றன. இவரது ஒவ்வொரு கோடும் பலநூறு கதைகளையும் உணர்வுகளையும் கூறுகின்றன.

'Moder" என்பதனை 'The New" என்று ஒக்ஸ்பேர்ட் ஆங்கில அகராதியில் குறித்து நிற்கின்றது. பேராசிரியர் சிவத்தம்பி நவீனத்தை காலப் புதுமையைக் குறிப்பதற் கான சொல்லாகவும் அதேவேளை "அண்மைக்காலம்" என்னும் கருத்தாக்கத்திற்கு உட்படுகிறார்.

(சிவத்தம்பி 2001 : 22, நவீனத்துவம்)

காண்பிய அணுகுமுறை ஊடாக ஒழுங்கமைக்கப் படும் வரைதல் என்பது உலகின் அனுபவங்களையும் பதிவுகளையும் பதிவு செய்தல் ஆகும். தமிழ்ச் சமூக ஆளுமை உருவாக்கத்தில் இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதைக்கு பாரதி ஒரு குறியீடு. தமிழ்ப்புனை கதைக்குப் புதுமைப்பித்தன் ஒரு குறியீடு ஆகும். கோடுகள் பற்றி ஆதிமூலர் தனது அனுபவத்தை குறிப்பிடுகையில்

"எனது அனுபவத்தில் கோடுகள் உயிரும் உணர்வு முள்ள நரம்புகள் போன்றவை. இவைதான் ஓவியத்தின் அடிப்படை எனவேதான் எமது கல்லெட்டு, ஓலைச்சுவடி எழுத்துக்கள் கூட இவை இதுதான் என்று சொல்ல முடியாத பாதிப்பை எனக்குள் ஏற்படுத்தியிருக்கின்றன. ஒரு வெள்ளைப் பேப்பரில் வேகமாக உங்களுக்கான தனித்துவத்தோடு ஒரு கோட்டைப் போட்டால் அது கம்பீரமாகப் பாய்ந்து ஓடுவது போலத் தோன்றும் இதற்கு மேல் கெஞ்சம் வர்ணம் வைத்தால் கோட்டின் வீரியம் குறைந்துவிடும் அந்தக் கோடுகளின் வேகத்தை இந்த வர்ணம் கொஞ்சம் குறைத்துவிடும். கறுப்பு வெள்ளை கோடுகளில்தான் வீரியம் தெரியும் இந்தக் காரணத்தினாலேயே இன்னொரு கலரை நான் சேர்க்க வில்லை."

என்று கூறும் ஆதிமூலர் கறுப்பு வெள்ளைக் கோடு களால் அதிகம் அறியப்படுகின்றார்.

**ஸ்ரீ.தினேஷ்குமார்**
**ஆசிரியர்**

# சாதனை மாணவி
# தமிழரசி இந்திரசித்து





கல்வியிலும் விளையாட்டிலும் பெருமையை வெளிப்படுத்தும் வீராங்கனைகளில் தமிழரசி இந்திரசித்துவும் ஒருவராகத் திகழ்வது பெருமைக்குரியதாகும். இவர் பல விளையாட்டுக்களில் தன் திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். இவர் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் தனது கல்வியை கற்று உயர்தரப் பரீட்சையை எழுதி 2A.B பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளார். இவர் பாடசாலையில் சிரேஷ்ட விளையாட்டுத் தலைவியாகக் காணப்பட்டார். பாடசாலை சார்பாக கோட்டம், வலயம், மாகாணம், 800m, 1500m போன்றவற்றில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றார். பின் அகில இலங்கை பாடசாலை ரீதியாக சைக்கிள் ஓட்டப் போட்டியில் 2016ஆம் ஆண்டில் 6ஆம் இடத்தையும் 2017, 2018 இல் 5ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். அது மட்டுமன்றி பாடசாலை மட்டம், மாகாண போட்டிகளில் 2ஆம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்திலும் பங்குபற்றும் வாய்ப்பு பெற்றார்.

வெளிவாரியான சைக்கிள் ஓட்டப் போட்டியில் இது வரை 43 நிகழ்வுகளில் பங்குபற்றினார். அவற்றுள் 15 போட்டிகளில் முதலிடத்தையும் 15 போட்டிகளில் 2வது இடத்தையும் 10 போட்டிகளில் 3வது இடத்தையும் பெற்றுக் கொண்டார். கச்சேரியினால் நடாத்தப்பட்ட மாகாண மட்டப் போட்டியானது முல்லைத்தீவில் நடைபெற்றது. இதில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார். அவற்றைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டு 2ஆம் IRNMAN போட்டியானது ஓர் கலப்பஞ்சல் போட்டியாக காணப்பட்டது. நீச்சல், சைக்கிள், மரதன் கலந்த இந்த ஆசிய மட்டப் போட்டியில் இலங்கை சார்பாக 3ஆம் இடத்தினை பெற்றுக் கொண்டார். பின் 2019ஆம் ஆண்டு 6ம் மாதம் அநுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய பெரு விளையாட்டு போட்டியில் வடமாகாணம் சார்பாக 3ஆம் இடத்தினை பெற்றுக் கொண்டார். இது பற்றி இவரிடம் வினவும் போது அவர் கூறிய கருத்து "இவ்வாறான போட்டிக்கு எனக்கு குடும்பம் ஒத்துழைத்தது. அத்தோடு அப்பாவின் சைக்கிள் ஓட்ட அனுபத்தின் மூலம் இப் பயிற்சியில் ஈடுபட வழி ஏற்பட்டது" என்றார். இவரைப் போன்று நாமும் நாம் பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்ப்போமாக.

**இ.றாஜினி**
2021 A/L - கலை

## இல்லமெய்வல்லுநர் போட்டி

பாடசாலையின் 2019ம் ஆண்டு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 31.01.2019 அன்று பி.ப. 1.00 மணிக்கு அதிபர் திருமதி. செ.தேவராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார் அவர்கள் கலந்து சிறப்பித்தார். வலி தென்மேற்கு பிரதேசத் தவிசாளர் உயர்திரு A.ஜெபநேசன் சிறப்பு விருந்தினராக பங்கு கொண்டார்.







அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்



# எனது குரல்

கண்ணான கல்விதனை இந்த
அவனியிலே மாணவர்க்கு
நல்கிடும் கூடமே பள்ளிக்கூடம்
பள்ளிக் காலத்து உங்கள்
பசுமையான நினைவுகளை
எண்ணிப்பாருங்கள்

ஒவ்வொரு நிகழ்விலும்
எத்தனை மகிழ்வுகள்
ஒவ்வொரு தினத்திலும்
எத்தனை மாலைகள்
அத்தனையும் என் மடிதனில்
இத்தனையும் இன்று - எனை
விட்டுப்போனதுவே !

கரகோசம் எந்தன்
சந்தோசமானது
சலங்கையின் ஓசை
சங்கீதம் ஆனது . இன்று
வண்டுகளின் ரீங்காரமும்
பூச்சிகளின் புகலிடமும்
குளவிகளின் கூடுகளுமாய்
போனதேன் ??

ஆயிரம் பேரை அரவணைத்து
ஆசையுடன் பூரித்தேனே !
வெயிலிலும் மழையிலும்
குடையெனக் காத்தேனே!
திறந்த வெளி மேடையிலும்
உள்ளேயும், வெளியேயும்
எந்தன் பிள்ளைகள்
இடர்பட்டு நிற்கையிலே - என்
உளம் வலிக்கிறது

## கேட்கிறதா ???

கண்ணில் உதிரம் வடிகிறது
கண்கொண்டு பாரீர்!
என் கவலைதனைக் கேளீர் !
ஏறும் வரை ஏணி
ஏறிய பின்னர் ஏன்
என்றெண்ணியோ
எனைக் கைவிட்டீர் ??

உங்கள் உடலில் ஒரு
நோயென்றால்
ஓடிச் சென்று மருந்திடுவீர்
"இதுவெறும் சடம் தானே"
எனக் கருதியோ
காலம் தாழ்த்துகிறீர்
கருணை கொண்டு
என்னைப்பாரீர்
மகிழ்வுதனைத்தாரீர்
எனை அழகாக்கி
என் குழந்தைகளை
மீண்டும் என் மடிதனில்
தவழவிடுவீர்.

ஆறு தசாப்பதங்களாய்
உங்களைச் சுமந்தவள்
இன்னும் பல தசாப்தங்கள்
சுமப்பேன்
அந்நாளுக்காய் உங்களின்
வருகைக்காய்
காத்திருக்கிறேன்
இருகரம் கூப்பி.

அ.கவித்தூரிகா
2020 கலைப்பிரிவு

# 3A தொடர்கிறது...



**2017**
ஜோ.அனற்றெனோக்கா
வணிகப்பிரிவு
மா.நி.77 (3A)

**2018**



மு.தர்சிகா
கலைப்பிரிவு
மா.நி.18 (3A)



லோ.அபிராமி
கலைப்பிரிவு
மா.நி.30 (3A)



**2019**
இ.நவீனா
கலைப்பிரிவு
மா.நி.04 (3A)



கராத்தேயில் சாதிக்கும் பூ.மகேஸியஸ் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவன். தனது எட்டு வயதில் இருந்து கராத்தே கலையினை தனது தந்தையான யூலியன் பெனாண்டோ அவர்களிடம் பயின்று போட்டிகளில் வெற்றியீட்டி வருகிறார். இவர் 2019இல் வடமாகாணத்தின் காட்டா போட்டியில் முதலாம் இடத்தையும் குமித்தே போட்டியில் முதலாம் இடத்தையும் வெற்றுள்ளார். மகேசியஸின் வெற்றிப் பயணம் தொடரட்டும்.

# பாராட்டுவதில் பெருமையடைகின்றோம்...



**இ.நவீனா**
**(கலைப்பிரிவு)**
**மா.நி.04 (3A)**



ச.தனுஜா
(கலைப்பிரிவு)
மா.நி.70(2A, C)



தே.சுஜித்தா
(கலைப்பிரிவு)
மா.நி.79 (2A, C)



இ.தமிழரசி
(கலைப்பிரிவு)
மா.நி.97 (2A, B)



சு.சமன்சா
(வர்த்தகப்பிரிவு)
மா.நி.108 (2A, B)



க.திவ்யா
(கலைப்பிரிவு)
மா.நி.135 (A, B, C)



வி.சபிதா
(கலைப்பிரிவு)
மா.நி.145 (A, 2B)



அ.ஹேமசாயினி
(கலைப்பிரிவு)
மா.நி.159 (A, B, C)



ந.டிஜானா
(கலைப்பிரிவு)
மா.நி.167 (2A, C)